# தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 19 | தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல் | நன்கொடை உரு.10


## பாழடிக்கப்பட்டுப் பள்ளத்தாக்குகளாக்கப்படுகின்றன விளைநிலங்கள்..

## பல்லாயிரம் ஆண்டுகள் பழமையுடைய தமிழ்ப் பெருநிலம் பள்ளத்தாக்குகளாக மாற்றப்பட்டு இந்தியாவால் அழிக்கப்படுகிறது..

## இந்திய அரசால் சுரண்டிச் சூறையாடப்படுகின்றது நெய்வேலி நிலக்கரி..

## தமிழ்நாட்டிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட நிலக்கரியைக் கொள்ளையடித்துத் திருடிக் கொண்டு போகின்றது இந்திய அரசு..

**1956 முதல் கொள்ளையடித்துக் கொண்டு போன நிலக்கரிக்கு இதுவரை பங்குத்தொகை (ராயல்டி) கொடுக்கப்படவில்லை..**

## தமிழ்நாட்டைக் காவு கொடுத்துதான் இந்தியா வாழ வேண்டும் என்றால்... தமிழ்நாட்டைக் காவு கொடுப்பது சரியா?

**தமிழ்நாட்டைக் காவு கொடுப்பதை மறுத்து நெய்வேலியை, தமிழ்நாட்டை மீட்கிற துணிவைத் தமிழ்நாடு அரசு பெற்றாக வேண்டும்..**

**தமிழ்நாட்டின் கட்சிகள் தமிழ்நாட்டின் அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்துவதற்காகத் தங்களுக்குள் பகைமைப்படுத்திச் சாடிக்கொள்ளாமல் இந்தியப் பாசிசத்தை எதிர்த்து ஓரணியில் நின்றாக வேண்டும்..**

**ஒரே ஒரு சுரங்கம் என்கிற திட்டத்தில் 5000 ஏக்கர் நிலப்பரப்பில் தொடங்கிய நெய்வேலி நிலக்கரி நிறுவனம்.. ஒன்பது சுரங்கங்கள் என 50 சிற்றூர்களை அழிக்கப் போகிறது..**

**உலகில் கரம்பு நிலங்களிலும் காடுகளிலுமே கனிம வளங்கள் எடுக்கப்படும் நிலையில் விளைநிலப் பகுதியில் சுரங்கம் அமைத்துச் சூறையாடுவது தமிழ்நாட்டையும் தமிழக மக்களையும் அழிப்பதற்காகவே..**

# நெய்வேலி சுரங்க விரிவாக்கத்திற்கு வரம்பு கட்டுவோம்!


● **பேராசிரியர் த. செயராமன்,** தமிழ்மண் தன்னுரிமை இயக்கம். ●


நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசன் என்ற இந்திய ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனம் 1956 இல் தொடங்கப்பட்டது. ஆண்டுக்கு 30.6 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரியை உற்பத்தி செய்கிற பெரும் நிறுவனம் இது. மின்சார உற்பத்தியின் திறன் ஆண்டுக்கு 5,192 56 மெகாவாட்; ஆண்டு வருமானம் 8,672.84 கோடி; 13,000 தொழிலாளர்கள் இதில் பணியாற்றுகிறார்கள். 360 கோடி மதிப்புள்ள பங்குகளை விற்க 2013இல் முடிவு செய்யப்பட்டபோது தமிழ் மண்ணில் உள்ள நிறுவனத்தை வேறு அன்னியர்களுக்குக் கொடுத்து விடக்கூடாது என்ற நிலைப்பாட்டை எடுத்து, தமிழ்நாடு அரசின் ஐந்து பொதுத்துறை நிறுவனங்கள் அப்பங்குகளை விலைக்கு வாங்கின. இந்த உளநிலை தொடர வேண்டும் என்பதுதான் தமிழ் மக்களின் விருப்பம்,

1956 இல் நெய்வேலி நிலக்கரி நிறுவனம் தொடங்கப்பட்டபோது 30 ஊர்களை சேர்ந்த மக்கள் எவ்வித எதிர்ப்புமின்றி தங்கள் வாழ்விடங்களை அளித்து இந்நிறுவனம் உருவாக உதவினர். தொடக்கத்தில் இக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பும் வழங்கப்பட்டது, 2002இல் இந்நிறுவனத்தின் 51% பங்குகளை விற்பனை செய்ய இந்திய அரசு அறிவிப்பு செய்தபோது தமிழ்நாட்டின் தலைவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அன்றைய பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயிடம் இது பொதுத்துறை நிறுவனமாகவே தொடர வேண்டும்; 51% பங்குகளை தனியாருக்கு விற்கக் கூடாது என்று தமிழ்நாட்டின் சில தலைவர்கள் வற்புறுத்திய நிலையில், அந்தத் திட்டத்தை அவர் கைவிட்டார். சிறுகச் சிறுக, வட இந்தியர்கள் மட்டுமே வேலை பார்க்கும் நிறுவனமாக நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசன் மாறி இருக்கிறது. நிரந்தர பணியாளர்களில் 90% வரை வட இந்தியர்களாக இருக்கிறார்கள், புதிதாக வேலைக்கு சேர்ப்பவர்கள் முற்று முதலாக வட இந்தியர்கள்தாம். 2022இல்கூட முழு நேர ஊழியர்கள் 289 பேர் சேர்க்கப்

பட்டதில் (பட்டதாரி பொறியாளர்கள்) ஒருவர் கூட தமிழ் நாட்டவர் இல்லை.

நெய்வேலி முதலாவது சுரங்கம் அமைக்க 3000 ஏக்கர் நிலம் பறிக்கப்பட்டது, இரண்டாவது சுரங்கம் அமைக்க இருபத்தைந்து கிராமங்களில் 10,000 ஏக்கர் நிலம் பறிக்கப்பட்டது. மூன்றாவது சுரங்கம் அமைக்க 26 கிராமங்களில் 12,000 ஏக்கர் நிலம் பறிக்கப்படுகிறது. இரண்டாவது சுரங்க விரிவாக்கத்திற்காக வளையமாதேவியில் நிலம் கையகப்படுத்தும் பணியும் அதை சமன்படுத்தும் பணியும் தொடங்கிய போது மக்கள் கடுமையாக எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். 9.3.2023 அன்று பல தலைவர்களும் பொதுமக்களும் கைது செய்யப்பட்டனர்.

ஆண்டுக்கு 11,000 கோடி வருவாயும் 2000 கோடி இலாபமும் காட்டும் இந்த நிறுவனம் தன்னுடைய பலன்களை வடமாநிலங்களுக்கு அளிக்கிறது. தோராயமாக, 5 ஆண்டுகளில் 45 ஆயிரம் கோடி வருவாய் ஈட்டியுள்ள நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசன் அதனால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய கடலூர் மாவட்டத்திற்கு 447 கோடி மட்டுமே ஒதுக்கியது. இந்நிலையில் இப்போது 1250 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த முனைகிறது. ஒட்டுமொத்த கடலூர் மாவட்டமும் எதிர்காலத்தில் பாலைவனம் ஆகும் அச்சம் இருக்கிறது.

இதுவரை 37,256 ஏக்கர் நிலம் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்ட 25 ஆயிரம் குடும்பங்களில் 1827 பேருக்கு மட்டுமே வேலை தரப்பட்டது. இப்போது அவர்களும் ஓய்வு பெற்று விட்டனர். 3,500 பேர் ஒப்பந்த தொழிலாளர்களாக மட்டுமே வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒப்பந்த தொழிலாளர்களும் பெரும்பாலும் பிற மாநிலத்தவர் ஆவர்.

2018 இல் மூன்றாவது சுரங்கம் அமைக்க 26 கிராமங்களில் நிலம் கையகப்படுத்த முயற்சி எடுக்கப்பட்டது. முன்பு நிலங்களை அளித்தவர்களுக்கு இழப்பீடும் வேலைவாய்ப்பும் அளிக்கப்படாத நிலையில், இப்போது நிலத்தைப் பறிக்க முயற்சிப்பது என்பது மக்களுக்கு எதிரான செயல்பாடு ஆகும். நெய்வேலியில் இரண்டு நிலக்கரி சுரங்கங்கள் மற்றும் முதல் சுரங்கத்தின் விரிவாக்கம் என மூன்று சுரங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மூன்று மட்டுமின்றி நான்காவதாக, "மூன்றாவது சுரங்கம்" என்ற பெயரில் புதிய சுரங்க வேலை தொடங்கப்படுகிறது. இதற்கு நிலம் எடுக்க கொளப்பாக்கம், அரசகுழ. கோ. ஆதனூர், பெருவரப்பூர், பெருந்துறை, வட்டிமேடு, கோட்டிமுளை, சிறுவரப்பூர், க. புத்தூர், சாத்தப்பாடி, தர்மநல்லூர் போன்ற 26 கிராமங்களில் 12,125 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படுகிறது. இவை வளமான நிலம் ஆகும். இவற்றில் உள்ள விவசாயம் முற்று முதலாக அழிக்கப்பட்டு, திறந்தவெளி சுரங்கம் அமைக்கப்பட்டு, பழுப்பு நிலக்கரி எடுக்கப்படும். இவ்வாறு நிலக்கரிக்காக மேலும் நிலங்களைக் கையகப்படுத்துவது தேவையற்றது. ஏனெனில் 1985இல் கையகப்படுத்தப்பட்ட நிலம் இன்னமும் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. இந்நிலையில் மேலும், மேலும் நிலத்தை கையகப்படுத்துவதன் நோக்கம் என்ன? ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த மகாலட்சுமி நிறுவனம் இங்கே நிலக்கரியை வெட்டி எடுக்க ஒப்பந்தமிட்டு இருக்கிறது. இவர்கள் அனுமதிக்கப்பட்டதை விட அல்லது திட்டமிடப்பட்டதை விட பல மடங்கு அதிகம் வெட்டி எடுத்து வெளியில் விற்பனை செய்து வருகிறார்கள். அதற்காகவே கூடுதல் நிலம் பறிக்கப்படுகிறது. நெய்வேலி நிலக்கரி சுரங்கங்களுக்கு என நிலம் கொடுப்பது ஏதோ நாட்டின் நலன் கருதி என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கக் கூடும். ஆனால் உண்மைநிலை அப்படி அல்ல. தனியார் நிறுவனங்கள் கூடுதல் இலாபம் பெறவே இப்போது நிலங்கள் பறிக்கப்படுகின்றன

[28/07, 12:35 ஜீ.வி] பேராசிரியர் செயராமன்: 1956□இல் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்காக மந்தாரக்குப்பம், நெய்வேலி, கெங்கைகொண்டான் போன்ற பகுதிகளில் 23 கிராமங்கள் கையகப்படுத்தப்பட்டு, இன்று 67 ஆண்டுகளாகியும் இழப்பீடும், வேலைவாய்ப்பும் வழங்கப்படாமல் அந்த மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் கம்மாபுரம், கத்தாழை பகுதியில் நிலங்களைக் கையகப்படுத்த நெய்வேலி நிலக்கரி நிறுவனமும், அரசு அதிகாரிகளும் முயற்சி செய்தபோது, மக்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள், கடந்த 2022 டிசம்பர் 26 ஆம் தேதி நிலக்கரிக்காக நிலம் கொடுத்தவர்களுடைய போராட்டம் நடைபெற்றது.

இதுவரை கையகப்படுத்தப்பட்டநிலத்தின் பரப்பளவு முதல் சுரங்கத்திற்காக 3000 ஏக்கர், இரண்டாம் சுரங்கத்திற்காக 25 கிராமங்களில் 10,000 ஏக்கர், மூன்றாம் சுரங்கத் திற்காக 26 கிராமங்களில் 12,125 ஏக்கர். இரண்டாவது சுரங்கத்தின் விரிவாக்கத்திற்காக மேலும் கூடுதல் நிலம் கையகப்படுத்துதல் ஆகியவை நடைபெற்று இருக்கின்றன.

2023 மார்ச் 9ஆம் தேதி வளையமாதேவியில் நிலத்தை சமன்படுத்தும் வேலையை நிறுவனம் முன்னெடுத்த போது பெருந்திரள் போராட்டம் நடைபெற்றது இதில் ஏராளமானவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நெய்வேலி என்எல்சி இரண்டாவது சுரங்க விரிவாக்கப் பணிக்காக கத்தாழை ,கரிவெட்டி மேல் வளையமாதேவி, கீழ் வளையமாதேவி, ஆதனூர் உள்ளிட்ட கிராமங்களை என்எல்சி நிர்வாகம் விவசாயநிலங்களைக் கையகப்படுத்தி இழப்பீடு வழங்கியுள்ளது. இதில் இழப்பீடு முழுமையாக வழங்கவில்லை எனவும், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை தரவேண்டும், மாற்று குடியிருப்பு மற்றும் கடந்த காலங்களில் ரூ.6 லட்சம் வழங்கி யவர்களுக்கு கூடுதல் இழப்பீடு வேண்டும் உள்ளிட்ட கோரிக்கையின் காரணமாக பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் இருந்தன. அவ்வப்போது ஆர்ப்பாட்டங்களும் பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றன.

வளையமாதேவி பகுதியில் பரவனாறு விரிவாக்கம் வாய்க்கால் வெட்டும் பணிக்காக என்எல்சி இந்தியா நிறுவனம் 30□க்கும் மேற்பட்ட பெரியமண் வெட்டும் இயந்திரங்கள் கொண்டு வந்து ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்துக்கு வாய்க்கால் வெட்டும் பணி நடைபெற்றது. இதில் விளைநிலங்களில் நெல் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர் அழிக்கப்பட்டது.

கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பை அடுத்த வளையமாதேவி பகுதியில் பல ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த குறுவைப் பயிர்களை எந்திரங்களைக் கொண்டு கடலூர் மாவட்ட நிர்வாகமும், என்.எல்.சி நிறுவனமும் அழித்திருக்கின்றன. ஆகவே பிரச்சினை தொடர்கிறது.

[28/07, 12:38 ஜீ.வி] பேராசிரியர் செயராமன்: 10 ஆண்டுகளுக்கு முன் கட்டாயத்தின் பெயரிலும் அச்சுறுத்தலின் பெயரிலும் நிலத்தை கொடுத்து விட்டு, கையில் ஏக்கருக்கு 6 லட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டவர்கள் இப்போது தவியாய் தவிக்கிறார்கள். உறுதிமொழி கொடுத்தபடி நிரந்தர வேலையும் என்எல்சி நிர்வாகம் தரவில்லை. நிலத்திற்கு பணத்தை வாங்கிக் கொண்டு நிறுவனத்தை ஏமாற்றுகிற வேலையாக இதை கருத வேண்டாம். அந்த மண்ணில் எத்தனைத் தலைவர்கள் இருக்கிறார்கள்..எந்த தலைவரும் பொறுப்புணர்வோடு மண்ணை கொடுக்காதீர்கள் என்று சொன்னதில்லை. கடலூர் மாவட்டத்தின் வளமான பகுதிகள் எல்லாம் நிலக்கரி வயலுக்காக எடுக்கப்பட்டு அழிக்கப்படுமானால், தமிழ்நாட்டின் உணவு உறுதிப்பாடு குறைந்து விடும் என்பதுதான் உண்மை, எந்த நாடும் தன்னுடைய வளமான விளைநிலங்களை பாழ்படுத்தி விட்டு நீடு வாழ்ந்து விடாது. என். எல். சி. நிறுவனத்திற்கு மொத்த கடலூர் மாவட்டமும் வேண்டும்; செயங்கொண்டம் உள்ளிட்டு அரியலூர் மாவட்டமும் வேண்டும், அவர்கள் தொடர்ந்து தோண்டிக்கொண்டே இருப்பார்கள். இதற்கு ஒரு வரம்பு கட்ட வேண்டும்.

முன்பு ஏக்கருக்கு 6 லட்சம் ரூபாய் வாங்கிக் கொண்டார்கள் என்பது உண்மை. அச்சுறுத்தல், ஆசை காட்டுதல், அதிகாரிகளின் கட்டாயம் இவற்றின் அடிப்படையில் மக்கள் நிலத்தைக் கொடுத்தார்கள். நிலத்தை கொடுக்க விரும்பாதவர்களுடைய நிலமும் சேர்த்துப் பறித்து எடுக்கப்பட்டது. இப்போது தமிழ்நாட்டின் நலன் கருதி, சுரங்க விரிவாக்கத்திற்கு நிலத்தை கொடுக்காமல் தடுத்து நிறுத்த வேண்டிய தேவை இருக்கிறது. நெய்வேலி நிலக்கரி நிறுவனம் திட்டமிட்டிருக்கிறபடி ஒன்பதாவது சுரங்கம் அமைப்புவரை இவர்கள் தொடர்ந்தால் 1,25,000 ஏக்கர் நிலம் சுரங்கத்திற்காகப் பறித்தெடுக்கப்படும். இதனால், தமிழ்நாட்டின் உணவு உறுதிப்பாடு என்பது முற்றிலுமாக அழிந்து போகும். ஆகவே தமிழ் நாட்டின் நலன் கருதியும், சுற்றுச்சூழல் பாதிப்புகளைத் தடுத்து நிறுத்தவும், இதற்கு மேல் சிறிதளவு கூட நிலம் கொடுக்காமல் பத்திரப்படுத்த வேண்டும். மாற்று எரிசக்தி நோக்கி நகர வேண்டிய இத்தருணத்தில், தரம் குறைந்த பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி அனல் மின் நிலையங்களை நடத்த முற்படுவது ஒட்டுமொத்த கடலூர் மாவட்டத்தையும், அரியலூர் மாவட்டத்தையும் காவுகொள்ள வாய்ப்பளிப்பதாகிவிடும்.

மண்ணைப் பாதுகாப்பது எவ்வளவு முக்கியம் என்பதை பொறுப்புணர்வோடு இந்த மக்களுக்கு எவராவது எடுத்துச் சொல்லி இருக்கிறார்களா? "நல்ல பணம் தருகிறேன் என்பார்கள், அவசரப்பட்டு கொடுத்து விடாதீர்கள்' என்பர்களேயொழிய இது தாய் மண்; இதை இழந்தால் மீண்டும் பெற முடியாது" என்று எவராவது சொல்லி இருக்கிறார்களா? நிலக்கரி எடுத்து விட்டால் அதன் பிறகு அது விளைநிலமாக மாறுமா ? எதற்காக மேலும் மேலும் நிலத்தைத் தோண்டுகிறீர்கள்?

நெய்வேலி அனல் மின் நிலையங்கள் செயல்பட்டால்தானே தமிழ்நாட்டுக்கு மின்சாரம் கிடைக்கும் என்று சிலர் கூறுவார்கள். தமிழ்நாட்டில் இருந்து நாள்தோறும் 11 கோடி யூனிட் மின்சாரம் வெளிமாநிலங்களுக்கு சென்று கொண்டிருக்கிறது. நெய்வேலி மின் உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு தான் தமிழ்நாட்டுக்கு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டின் மண்ணும் தமிழ்நாட்டின் நிலத்திற்கு அடியில் இருக்கக்கூடிய கனிம வளமும் தமிழ்நாட்டிலேயே கையாளப்பட வேண்டும். தமிழ்நாட்டிடம் நிறுவனத்தை ஒப்படைத்துவிட்டு ஏன் எல்சி. நிர்வாகம் வெளியேற வேண்டும். அதுதான் நியாயம். பல்வேறு நாடுகளில் அப்படி நிகழ்ந்திருக்கின்றன.

ஒன்று, அந்த நிலத்தை என்.எல்.சி. நிர்வாகமே மக்களிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும்;அந்த தொகையை தள்ளுபடி செய்ய வேண்டும். அல்லது தமிழ்நாடு அரசு அந்த தொகையை செலுத்தி நிலத்தை மக்களுக்கு மீட்டுத் தர வேண்டும்.

விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்வது இல்லையா? அதைப்போல இதைச் செய்யக்கூடாதா?

பல்லாயிரம் கோடி கடனை வாங்கிக் கொண்டு வெளிநாடுகளுக்கு ஓடிப் போனார்களே கார்ப்பரேட் முதலாளிகள், அவர்களை என்ன செய்து விட்டார்கள்? ஏமாந்து போய் நிலத்தைக் கொடுத்துவிட்டு நிற்கும் மக்கள் பிரச்சனையில் தமிழ்நாடு அரசு தலையிட்டு தமிழ் மண்ணை மீட்க வேண்டும்.

தமிழ்நாட்டின் உணவு உறுதிப்பாட்டையும், தமிழ்நாட்டின் நிலப்பரப்பையும் காப்பாற்றுவதற்கு தமிழ்நாடு அரசு உடனடியாக தலையிட வேண்டும் என்று கோருகிறோம்.

## நெய்வேலியை மீட்போம்! - ஆர்ப்பாட்டம்

கடந்த ஆகத்து 12 அன்று மாலை சிதம்பரத்தில் தமிழக மக்கள் முன்னணி நெய்வேலியை மீட்போம், விளைநிலங்களைப் பறிக்காதே, என் எல் சி யே வெளியேறு, 1956 தொடங்கிப் பங்குத் தொகை(இராயல்டி) கொடு, தமிழ்நாடு அரசே நெய்வெலியை ஏற்று நடத்து என்ற முழக்கங்களை வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தியது.. காவல்துறை தொடக்கத்தில் இசைவு கொடுத்தவர்கள் நிகழ்ச்சி அன்று காலை ஆர்ப்பாட்டத்தை நடத்தக்கூடாது என மறுத்தனர்.. பின்னர் தோழர்கள் விடாது போராடி நடத்த இசைந்தவர்கள் நாற்காலிகள் போட, ஒலிபெருக்கி அமைத்துக்கொள்ள மறுத்தனர்.. ஒவ்வொன்றுக்கும் போராடிப் போராடியே பெறமுடிந்தது,, இறுதியாகத் தோழர் தங்க குமரவேல் தலைமையில், தோழர்கள் பேராசிரியர் செயராமன், பொழிலன், பாவெல், நிலவழகன், சுப்பு மகேசு, தெய்வமணி, விடுதலைச் செல்வன், தயாநிதி, நிலவன், தமிழ்க்செல்வன் உள்ளிட்டுத் தோழர்கள் கண்டன உரையாற்றினர்..நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டனர்..

# பதினொன்றாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

# தமிழுக்கு நேர்ந்த பேரவலம்!

● முனைவர் கி குணத்தொகை

**வெளியேற்றப்பட்ட மொழியா தமிழ்?**

மாநாட்டில் தமிழ்நாடு மட்டுமன்றிப் பிற மாநிலங்கள், தமிழீழம், மலையகம், சிங்கை, நிப்பான், தென்கொரியா, பிரான்சு, செருமனி உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் தமிழ் அறிஞர், பாவலர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், அகழ்வாய்வறிஞர், பதிப்பாளர் பங்கேற்கின்றனர் என்றும் தமிழின் தொன்மை, தமிழிலக்கியம், மொழியியல், தமிழ்ப் பண்பாடு, தொல்லியல், கல்வெட்டியல், மாந்தவியல், குமுகவியல், மொழிபெயர்ப்பியல் எனப் பல்வேறு தலைப்புகளில் ஏறத்தாழ 200 ஆய்வுக் கட்டுரைகள் வழங்கப்பட விருக்கின்றன என்றும் மாநாட்டைத் தொடங்கிவைக்க முதலமைச்சரைஅழைத்திருப்பதாகவும் அவர் விரைவில் ஒப்புதல் அளிப்பார் என்றும் சூன் 2ஆம் நாள் செய்தியாளர் சந்திப்பில் மன்ற ஆள்கையர் தெரிவித்ததாக மறுநாள் நாளேட்டில் செய்தி வந்திருந்தது. ஆனால், அவர் வரவில்லை.

மாநாட்டிற்கு வந்திருந்தோரில் சிலர் “இந்த இடத்தில் வைத்தால் எப்படி முதலமைச்சரால் வரமுடியும்? வேறு ஓர் அரங்கில் நகரத்தின் நடுப்பகுதியில் ஏந்து உள்ள பகுதியில் வைத்திருந்தால் வந்திருப்பார்” என்று கூற, ஒருவர், “முதலமைச்சர் அப்படி எல்லாம் பார்ப்பவரில்லை; குடிசைப் பகுதிகளுக்கு எல்லாம் சென்று வருபவர்; இங்கு எப்படி வராமல் போய்விடுவார்?” என்று மறுத்துக் கூறிக்கொண்டிருந்தார். “2010இல் உலகத்தமிழ் மாநாட்டைத் தமிழ்நாட்டில் நடத்தத் தமிழ்நாட்டரசு சார்பில் கேட்ட பொழுது, “குறுகிய கால இடைவெளியில் நடத்த இயலாது; மாநாடு தொடர்பான ஏற்பாடுகளுக்கும் ஆய்வுக் கட்டுரைகளை உலக முழுவதிலுமுள்ள தமிழறிஞரிடமிருந்து பெறவும் போதிய கால இடைவெளி வேண்டுமென்றும் அப்போதைய உலகத் தமிழாராய்ச்சி மன்றத் தலைவராக இருந்த நிப்பான் நாட்டுத் தமிழறிஞர் நொபொரு கரசிமா தெரிவித்தார். ஆனால் அப்பொழுதைய முதலமைச்சர் மாநாட்டினை உடனடியாக நடத்தவேண்டிய சூழலில் தான் இருப்பதாகக் கருதினார். அதனால் மன்றத்தின் துணைத் தலைவர் இருவர் மாநாடு நடத்தத் தமிழ்நாட்டரசுக்கு இசைவளித்தனர். ஆனாலும் அரசு அதனை ஏற்காமல் செம்மொழி மாநாடு என்று அறிவித்து நடத்தியது. ஆகவேதான் இப்பொழுதைய மாநாட்டில் முதலமைச்சர் பங்கேற்கவில்லை” என்றும் சிலர் பேசிக்கொண்டனர்.

மாநாட்டின் தொடக்க விழா நடந்துகொண்டிருந்தபோது, ‘சிறுபான்மையினர், வெளிநாடுவாழ் தமிழர் நலன், அகதி, வெளியேற்றப்பட்டோர் துறைகள்’ அமைச்சர் பங்கேற்றார். உலகளாவிய தமிழ், தமிழ்நாட்டில் ‘சிறுபான்மையினர், வெளிநாடுவாழ், அகதி, வெளியேற்றப்பட்டமொழியானதோ? அதனால்தான், சிறுபான்மையோர் ஆணையத் தலைவர் மாநாட்டினைத் தொடங்கி வைத்தாரோ? என்னே தமிழுக்கு நேர்ந்த நிலை! மாநாடு நடைபெறும் தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினரும் மாநாட்டில் பங்கேற்றார். “எதற்கும் பயன்படலாம் என்பதற்காகவோ பழி வந்துவிடக்கூடாது என்பதற்காகவோ இவ்விருவரையும் அணுப்பினரோ”? என்றும் ஒரு பேச்சு பார்வையாளரிடையே நிலவியது.

**அரசுத் தமிழ் நிறுவனங்கள், பேராசிரியர், அறிஞர் நிலை:**

மொழித் தொடர்பான இந்திய அரசின், தமிழ்நாட்டரசின் அத்துணை அமைப்புகளில் ஒன்றுகூட இந்த மாநாட்டில் பங்கேற்றதாகவோ சிறு துணைநின்றதாகவோ தெரியவில்லை. அந்த அளவுக்குத் தமிழுக்கு மிக அவலமான நிலை ஏற்பட்டது. இதிலும் தமிழ் தன்னேரில்லாத தமிழாக ஆகிவிட்டது. இந் நிறுவனங்களின் அதிகாரிகளும் உயரலுவலர்களும் பேராசிரியன்மாரும்கூட இவ் அரசுகளுக்கு அஞ்சிப் பங்கேற்கவில்லை என்ற பேச்சும் காதில் விழுந்தது. ஆனால், இந் நிறுவனங்களுள் ஒன்றின் பேராசிரியர் சிலர் ஆய்வுக்கட்டுரைகள் வழங்கியதைக் காணமுடிந்தது.

முதுபெரும் பேராசிரியர் என்றும் தமிழறிஞர் என்றும் நன்கு அறியப்பட்டோருள் பலரை இம் மாநாட்டில் காணமுடியவில்லை. அகவை முதிர்ச்சி, வெளிநாடு சென்றமை, நலக் குறைவு, போட்டிக் குழுக்களிடையே எந்தப் பக்கமும் சாராமல் இருந்துவிடுதல், அரசுநிலைபாட்டுக்குச் சார்பாயிருத்தல் என்று இதற்குக் காரணங்கள் பல தெரிந்தன.

**பாராட்டு!**

குறைபாடுகள் சிற்சில இருந்தாலும் சென்ற இதழில் சுட்டிய பல்வேறு பின்னிழுப்புகளுக்கு இடையே மன்றப் பொறுப்பாளர், மாநாட்டு ஆள்கையர் எப்படியோ மாநாட்டினை நடத்தி முடித்தது, அவர்தம் நிலையிலிருந்து பார்க்கும்போது பாராட்டுக்குரியதே!

**58 ஆண்டுகளில் 11 மாநாடுகளே!**

உலகத் தமிழாராய்ச்சி மன்றம் தொடங்கி 58 ஆண்டுகள் ஆகியுள்ளன. அதனை நிறுவிய அறிஞர் குழாத்தினர் “ஈராண்டுகளுக்கு ஒருமுறை உலகளாவிய தமிழாராய்ச்சி மாநாடு நடத்துவது என்று எடுத்த முடிவின்படி இதுவரை 29 மாநாடுகள் நடத்தப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் 11 மாநாடுகள் மட்டுமே நடந்து முடிந்திருக்கின்றன. உலகில் எவருக்கும் தாய்மொழியாக இல்லாத சமற்கிருதத்திற்குப் பல மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. இந்திய அரசும் அம் மொழிக்குக் கோடிக் கணக்கில் மக்கள் பணத்தைக் கொட்டிக் கொடுக்கிறது. ஆனால் உலகளாவிய தமிழ்மொழியின் மாநாடு நடைபெறுவதில் எத்துணை எத்துணை இடர்ப்பாடுகள்? தடைக்கற்கள்? முட்டுக்கட்டைகள்? முகச் சுளிப்புகள்? கோணல்மாணல்கள்? குறுக்குச்சால்கள்? குழப்படிகள்? உருட்டுகள்? புரட்டுகள்? தடால்புடால்கள்? பிளவுகள்? ஆம். 2010இல் ஒரு பிளவு. 2023இல் மீண்டும் ஒரு பிளவு. மிகச் சிறந்த நோக்கங்களுடன் தொடங்கப்பட்ட உலகத்தமிழாராய்ச்சி மன்ற ஆளுகையர், மிகவிரைவாகப் புறந்தள்ள கூடிய சிறிய அளவிலான சிக்கல்களுக்கு ஈடு கொடுக்காமல் பிளவுபட்டுள்ளனர். தமிழின் நலமா? தம்மின் பெருமையா? எது பெரியது என்று எண்ண வேண்டாவா?

**ஒரே பெயரில் இரண்டு மாநாடுகள்:**

இப்பொழுது பிரிந்து சென்றோர், மலையகத்தில், சென்னை மாநாடு நடந்த 12 நாள்களே ஆன நிலையில், ‘பதினொன்றாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு’ என்ற அதே பெயரில், மலையக அரசு, மலையகப் பல்கலைக் கழகம் துணையுடன் மாநாடு நடத்தியுள்ளனர். ஒரே ஆண்டில், மாதத்தில், ஒரே பெயரில் இரண்டு மாநாடுகள் என்ற வரலாற்றுப் பழியினை ஏற்படுத்திவிட்டனர். தமிழ்நாட்டு முதலமைச்சர், பிற அமைச்சர் பலரையும் சந்தித்து அழைப்பு விடுத்த படங்களை அவர்தம் இணையத்தளத்தில் பதிவேற்றியுள்ளனர். முதலமைச்சர் தமிழுக்கு ஆக்கம் சேர்க்கும் வகையில் இரண்டு பிரிவினரையும் ஒன்றுபடுமாறு அறிவுரைத்திருந்தால் தமிழ் மக்கள் மகிழ்ந்திருப்பர். 25 கோடி உருவா செலவில் நடத்தப்படுவதாக இணையத்தளத்தில் விளம்பியிருந்தனர். சென்னை மாநாடு 25 இலக்கத்துக்குள் முடிந்திருக்கும் என்றே மதிப்பீடு செய்யப்படுகிறது. மலையக மாநாட்டிற்குத் தமிழ்நாட்டிலிருந்து ஆளும்கட்சி, எதிர்க்கட்சி, இவ்விரண்டின் கூட்டணிக் கட்சிகள் என்று தேர்தல் கட்சிகள், தமிழ்த் தேசிய அமைப்புகள் சிலவற்றின் தலைமைகள், முன்னணியர் என்று சிலர் பங்கேற்றனர். அன்னார் இங்கே பேசும் அரசியல் செய்திகளை அங்கேயும் பேசினர். இதனால் மாநாட்டில் சலசலப்பு ஏற்பட்டது. தமிழர் ஒற்றுமைபற்றிப் பேசும் இத்தகையோர் உலகத் தமிழாராய்ச்சி மன்றப் பிளவைத் தவிர்ப்பதில் சிறிதேனும் முயன்றிருக்கலாமே? இத்தகையோர் சென்னை மாநாட்டிற்கும் வந்திருக்க வேண்டுமன்றோ? தமிழ்மீது அக்கறை இருக்குமானால் அழைக்கவில்லை என்றாலும் பார்வையாளராகப் பங்கேற்றிருந்தால் அன்னவருக்கே அச் சிறப்பு என்பது எளியோரின் எண்ணம். இதுகூட அன்னார் அங்கு மட்டுமே சென்றதனால்தான். இவருள்ளும் சிலர் மலையக மாநாட்டிற்குத் தாம் செல்வது சரியே என்பது போல் வலையொளி உலாவில் செவ்வி அளித்திருந்தனர். அத்தகைய சில காணொலிகளைக் காண நேர்ந்தது. தனிநாயக அடிகள் இம் மன்றத்தைத் தொடங்கியது பற்றியும் முந்தைய மாநாடுகளைப் பற்றியும் குறிப்பிட்டனர். 2010 பிளவு பற்றிக் குறிப்பிட்டபோது, பிரிந்துசென்றோர் நீங்கிய பிறகு முறைப்படியான மன்றத்தினர் நடத்திய மாநாடுகள் என்று குறிப்பிடுகின்றனர். இந்த அளவுகோலைச் சென்னை மாநாட்டிற்குப் பொருத்தாமல் மழுப்புகின்ற வகையில் கூறினர். இதன் காரணம் யாதோ?

**தமிழ் மக்களது விருப்பம்:**

தமிழுக்காக என்று சொல்லிக் கொண்டு இப்படி முரண்பட்டுப் போட்டி மாநாடுகளை நடத்துவது சரியில்லை என்பதும் இப்பொழுதைய பிளவை நீக்கிக்கொண்டு இனி வருங்காலத்திலாவது இரு பிரிவினரும் ஒன்றுபட்டு உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளைச் சிறப்பாக நடத்தி, மற்ற மொழியினர் ஒற்றுமையுடன் பாடுபட்டு அவரவர் மொழிக்கு ஆக்கம் சேர்ப்பது போல், தமிழுக்கு ஆக்கம் சேர்க்கவேண்டும் என்பதுமே உலகத் தமிழ் மக்களுடைய விருப்பம் என்பதில் ஐயமில்லை!

(பின்குறிப்பு: உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் தோற்றம், நோக்கங்கள், செயற்திட்டங்கள், வரலாறு, இதுகாறும் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள், அவை நடந்தபோது நிகழ்ந்த சில அறியப்படவேண்டிய செய்திகள், பாவாணர் பாவலரேறு உள்ளிட்ட தமிழறிஞர்க்கு நேர்ந்த நிலைகள்பற்றி அடுத்த இதழ்களில் பேசுவோம்!)

**தமிழ்நாடு இதழுக்காக அண்மையில் நன்கொடை வழங்கியவர்கள்..**

| | |
|---|---|
| திரு. பிச்சைவள்ளிநாயகம், சென்னை | 2000 |
| திரு. தென்முகநம்பி, சென்னை | 500 |
| தோழர் மணிவண்ணன், சென்னை | 100 |
| தோழர் அறிமண், சென்னை | 1000 |

# வட இந்தியர் புலம்பெயர்வும் - கார்ப்பரேட் அரசும்

● தங்க. குமரவேல் ●

வட இந்தியர் புலம்பெயர்வால் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் ஒவ்வொரு நாளும் நிரம்பி வழிகிறது. அவர்கள் தமிழ்நாட்டிற்கு வேலைவாய்ப்பைத் தேடித்தான் வருகிறார்கள். அங்கு வேலைவாய்ப்பு கிடைக்காததற்குக் காரணம் கார்ப்பரேட்டுகளின் கைப்பாவையாக ஒன்றிய அரசு செயல்படுவதால் அங்கு வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது. இந்த நிலைமையை மறைக்க, மத போதையை ஊட்டி வளர்க்கிறார்கள். இசுலாமிய வெறுப்பை ஏற்படுத்தித் திசை திருப்புகின்றன. அதன் காரணமாக சில கலவரங்களும் நடக்கின்றன. ஆனாலும் நீண்ட நாட்களுக்கு அதே போதையில் வைத்திருக்க முடியாது. மத போதை தெளிந்தப் பின்பு குடும்பத்தைப் பார்க்க வேண்டும். குடும்பத்தினரின் பசியைப் போக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். அதனால் வேலைவாய்ப்பு எங்குக் கிடைக்கிறதோ அங்கு செல்லவேண்டும் என்று முடிவு செய்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் தமிழ்நாட்டை நோக்கி அலையலையாக வருகிறார்கள்.

தமிழகத்தில் மூன்று வேளை உணவுடன் அதிகப்படியான கூலியும் கிடைப்பதால் இங்கு அதிகமாக வருகிறார்கள். அவர்கள் மாநிலத்துடன் ஒப்பிடும்போது ஒரு கொத்தனாருக்கு இங்கு 700 ரூபாய் என்றால் அவர்கள் மாநிலத்தில் 300 ரூபாய்தான். அதனால் இங்கு 400 ரூபாய்க்கு வேலைபார்க்கத் தயார்நிலையில் உள்ளனர். ஆனால் பீகார், உத்திரப்பிரதேசம் போன்ற வட மாநிலங்களில் 100, 150 கூலி. ஆகவே அவர்களுக்கு 350, 400 ரூபாய் பெரிய தொகையாகத் தெரிகிறது. அதோடு மட்டுமல்லாமல் அங்கு வேலையாட்களுக்கு உணவு கொடுக்கும் பழக்கம் இல்லை. ஒரு வர காப்பி மட்டுமே உணவாகக் கொடுப்பார்கள். அதைக் குடித்துவிட்டு காலை முதல் மாலை வரையிலும் வேலைசெய்ய வேண்டும். தமிழகத்தில் மூன்று வேளை உணவு, தேநீர், வடை கொடுத்து 350, 400 ரூபாய் கொடுப்பதால் அதை அவர்கள் பெரிதாகக் கருதுகிறார்கள்.

தமிழகத்தில் திராவிடஇயக்கங்கள், பொதுவுடைமை இயக்கங்களால் கூலி குறித்த விழிப்புணர்வு தொழிலாளர்களிடம் இருக்கிறது. அதனால் தமிழகத் தொழிலாளர்கள் 700 முதல் 900 ரூபாய்க்கு குறைந்து வேலைக்கு வரமாட்டார்கள். அதனால் வடமாநிலத் தொழிலாளர்கள் கட்டுமானப் பணிகள், கடை, விவசாயம், நூல் தொழிற்சாலை உள்ளிட்ட பல்வேறு வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். கூலி குறைவாக இருப்பதால் வட மாநிலத் தொழிலாளர்களைத் தமிழ்நாட்டு முதலாளிகள் வேலைக்கு அமர்த்திக் கொள்கின்றனர். இதில் சிலபேர் வடநாட்டு உணவான 'பானி பூரி' உள்ளிட்ட சிறு சிறு தொழில்களையும் செய்கிறார்கள். இதைத் தமிழ்த் தேசியம் பேசக்கூடிய சிலர் அன்னிய இனத்தின் ஆக்கிரமிப்பு, படையெடுப்பு என்று பார்க்கிறார்கள், பேசுகிறார்கள்.

அவர்கள் அரசர்கள் காலத்தில் மராட்டியப் படையெடுப்பு, நாயக்கர்கள் படையெடுப்பு, விசயநகரப் பேரரசு போலவும், மாலிக்காபூர் வரவு போலவும் இங்குப் படையெடுத்து நாடுபிடித்து அதிகாரம் செய்ய வரவில்லை. பஞ்சம் பிழைக்க வந்தவர்களையும் படையெடுத்து வந்தவர்களையும் ஒன்றாகப் பார்க்க முடியாது.

அதனால் இந்த வருகையை நாம் ஆதரிக்கிறோமா? என்றால் நிச்சயமாக இல்லை. ஏனென்றால் வேலை கொடுப்பது மனிதாபிமானம். அதனால் இந்த புலம்பெயர்வை நாம் எதிர்க்க வேண்டும். அவர்களுக்கு அவர்களின் மாநிலத்தில் ஒன்றிய, மாநில அரசுகளை எதிர்த்துப் போராடக் கற்றுக்கொடுக்க வேண்டும். காரணம் தமிழ்நாட்டுடன் ஒப்பிடும்போது வடமாநிலங்கள் நூறாண்டுகள் பின்தங்கியுள்ளது. சமூகநீதிக் கொள்கை, பகுத்தறிவு போன்ற முற்போக்கான கொள்கை அங்கு இல்லை. தீண்டாமைக் கொடுமை, பல்வேறு மூட பழக்கவழக்கங்கள் மிகமிக அதிகமாகக் கடைப்படிக்கப்படுகிறது. இப்படிப் பல்வேறு பிரச்சனைகள் அங்கு உள்ளது. இந்த நிலையில் புலம்பெயர்ந்து வருபவர்கள் எந்தச் சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதையும் நாம் கணக்கெடுத்துப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் சில உயர்ந்த சாதிகளைத் தவிர மற்றவர்கள் விரட்டியடிக்கப்படுகிறார்களா? தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட இடைநிலைச் சாதிகள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மார்க்சியம் சார்ந்து தொழிலாளர்கள் நலன் என்பதிலிருந்து மனிதாபிமான நிலையிலிருந்து மட்டுமே நாம் ஆதரித்தாலும் பாட்டாளி வர்க்கம் புலம்பெயர்வதை ஆதரிப்பது கிடையாது. மாறாக அவர்களை அந்தத் தேசத்திலிருந்து போராடக் கற்றுக் கொடுக்க வேண்டும். அந்த மண்ணில் படிப்பு, வேலைவாய்ப்பு உள்ளிட்ட அனைத்து உரிமைகளும் கிடைக்க பாட்டாளி வர்க்கத்தைத் தயார்படுத்த வேண்டும். அதுதான் பாட்டாளி வர்க்க நலன் ஆகும். பாட்டாளி வர்க்கம் புலம்பெயர்வதை வேடிக்கை பார்ப்பது அல்ல. அதனால் அந்த பாட்டாளி வர்க்கத்திற்கு அவர்கள் அரசை எதிர்த்துப் போராட வேண்டிய உணர்வை ஊட்ட வேண்டியது நமது கடமையாகிறது. அந்தத் திறன் வளர்வதற்குப் பகுத்தறிவும் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. தமிழ்நாடு போன்ற மதவாதத்தை முறியடிக்கக் கடவுள், மதம் சார்ந்த மூடநம்பிக்கைகளை உடைத்தெறிய வேண்டிய அவசியத்தையும் போராட்ட உணர்வையும் ஊட்டவேண்டியது அவசியமாக உள்ளது.

மேலும் அவர்கள் வருவதைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களின் மூடத்தனங்களை மூலதனமாக வைத்துக் கொண்டு வடமாநிலங்களில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியைப் பிடித்ததைப் போல், தமிழ்நாட்டிலும் மதவாதக் கலவரங்கள் செய்ய இந்துத்துவ சூழலைப் ஏற்படுத்தி அவர்களைக் கொண்டு தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்க பின்னாலிருந்து சதிசெய்து முயற்சிக்கிறார்கள் என்பதையும் மறுக்க முடியாது. இது வெளிப்படையான உண்மை. வடமாநிலத் தொழிலாளர்களைக் கையாளுவதைத் தமிழ்நாடு அரசு கவனமாகக் கையாளவேண்டும். வடமாநிலத் தொழிலாளர்களைத் துன்புறுத்துதல் கூடாது.

தமிழ்நாட்டில் உள்ள சமூக விரோதிகள், சாதிவெறி சிந்தனையாளர்களுடன் சேர்ந்து கொண்டு கலவரம் செய்தால் யாராக இருந்தாலும் கைதுசெய்து தண்டனைக்கு உட்படுத்த வேண்டும். இயக்கங்கள் அவர்களுக்கு ஈவு இரக்கம் காட்டக்கூடாது. இரக்கம் காட்டி ஏமாந்துவிடக் கூடாது என்பதே நமது நிலைப்பாடு. அதே நேரத்தில் பாட்டாளி வர்க்கத்தின் புலம்பெயர்வை நம் இனத்தின் மீதான படையெடுப்பாக தவறாக எண்ணிவிடக் கூடாது. இதை ஒரு ஊசிமேல் நிற்பதுபோல் அறுவா மீது நிற்கும் போது எப்படி வெட்டிவிடாமல் பதம்பார்த்து நிற்கிறோமோ அதேபோல் இதை அணுக வேண்டியது கட்டாயம் ஆகிறது.

மேலும் தொழிலாளர்களையும், மார்வாடிகளையும் ஒன்றாகப் பார்க்கக் கூடாது. மார்வாடிகள் பனியா கும்பலைச் சேர்ந்தவர்கள் கார்ப்பரேட் பெரு முதலாளிகளுடன் கைகோர்த்துக் கொண்டு கனிமவளங்களையும் கொள்ளையடித்துக் கொண்டு தமிழர்கள் செய்துவந்த மின் மற்றும் மின்னணுவியல் பொருள்கள்(எலக்ட்ரிகல் அன்டு எலக்ட்ரானிக்), குழாய் பொருள்கள்(பிவிசி), உணவு விடுதி உள்ளிட்ட அனைத்துத் தொழில்களையும் கைப்பற்றிக் கொள்ளும் கும்பலையும் வடமாநிலத் தொழிலாளர்களையும் ஒரே தட்டில் வைத்துப் பார்ப்பது தவறானது.

அதுவும் இதுவும் ஒன்று கிடையாது என்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு சொல்ல முடியும். விசயநகரப் பேரரசு இங்கு வந்து 72 பாளையப்பட்டுகளாகப் பிரித்து ஆண்டுகொண்டு இருக்கும்போது மதுரையில் விசயநகர அரசின் கிளையாக நாயக்கர் அரசு செயல்பட்டது. இன்னொன்றையும் தெளிவுபடுத்த விரும்புகிறோம். நாயக்கர் என்பது பட்டம் சாதி கிடையாது. நாயக்கர் என்றால் தலைவன் என்று பொருள். எந்தெந்த அரசுக்கு நாயக்கர் தலைவர்களாக இருந்தார்களோ அவர்கள் நாயக்கர் என்று அழைக்கப்பட்டனர். பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்களும் நாயக்கர்களாக இருந்தார்கள் என்று நாம் சொல்கிறோம். அதேபோல் நாயுடு என்கின்ற உயர்சாதியைச் சேர்ந்தவர்களும் நாயக்கர்களாக இங்கு வந்தார்கள். அதேபோல் தெலுங்கு பேசும் அருந்ததியர்களும் இங்கு வந்தார்கள். அவர்கள் துப்புரவு செய்யவும், மலம் அள்ளவும் இங்குப் பயன்படுத்தப்பட்டார்கள். அவர்களை இங்கு தோட்டி என்றும் அழைக்கப்பட்டார்கள்.

இவர்கள் நாயக்கராக இருந்த தெலுங்கர்களுக்கும் மலம் அள்ளினார்கள். அதே இங்கு நாயக்கர் நிலையில் இருந்த தமிழ் குறுநில மன்னர்களுக்கும் இடைநிலை உயர்சாதிகளுக்கும், சமீன்தாரர்களுக்கும் சேர்த்தே மலம் அள்ளினார்கள். அவர்களையும் அடிமையாகத்தான் வைத்திருந்தார்கள். அதுபோல் நாயக்கர் ஆட்சியில் வந்த நாயக்கரையும், அருந்ததியர்களையும் எப்படி ஒன்றாக கருதமுடியாதோ அதேபோல் இப்போது உள்ள மார்வாடிகளையும், வடமாநிலத் தொழிலாளர்களையும் ஒன்றாகப் பார்க்கவும் முடியாது; கருதவும் முடியாது.

வடமாநிலத் தொழிலாளர்களால் பறிபோகும் தமிழ்நாட்டுத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு வடமாநிலத் தொழிலாளர்கள் தமிழகத்திற்கு வருவதால் இங்குள்ள தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பறிபோகிறது என்று தமிழ்த்தேசியவாதிகளும், தொழிலாளர்களும் கூறுகிறார்கள். அது முற்றிலும் உண்மை. அதற்குக் காரணம் அவர்கள் குறைந்த கூலிக்கு வேலைக்கு வருவதால்தான் அவர்களுக்குக் குறைந்த கூலி கொடுத்து வேலை வாங்கும் முதலாளிகள் யார்? அவர்களும் தமிழர்கள்தானே. வட நாட்டு முதலாளிகள் இல்லையே. நம்ம ஆளை வேலைக்குக் கூப்பிட்டால் 900 ரூபாய் கேட்பான். அவர்களை கூப்பிட்டால் 300, 400 ரூபாய் கொடுத்தால் போதும் என்று அழைத்து அரவணைத்துக் கொள்கிறார்கள். இதற்கு இடைக்காலத் தீர்வு தமிழ்நாட்டில் உள்ள கட்டிடப் பொறியாளர்கள், மேஸ்திரிகள் இங்குள்ள தமிழர்களைத்தான் வேலைக்கு அழைக்க வேண்டும் என்று முடிவு செய்ய வேண்டும். கூலி பற்றிய விழிப்புணர்வு வட மாநிலத் தொழிலாளர்களுக்கு வேண்டும். உலகமயமாக்கல் தன்மையோ இதுதான் அடிமாட்டு வேலைக்கு ஒருவரின் உழைப்பை விற்பனை செய்ய தூண்டுவதுதான் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம். முதலாளித்துவம் ஒரு தேசத்துக்குள் இதைச் செய்யும். ஆனால் ஏகாதிபத்தியம் நாடு கடந்து செய்கிறது. இந்த நிலைமையைப் பாசிஸ்ட்டுகள் இன அழிப்புக்கு, பண்பாட்டு அழிப்புக்குப் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாகவும் உள்ளது.

மேலும் திருட்டு என்பது பதுக்கலுக்கான கலகக்குரல் என்று மார்க்சியம் வரையரைக்கிறது. அறம் சார்ந்து பார்த்தால் திருட்டு என்பது குற்றம். ஆனால் மார்க்சியம் சூழலுக்கு ஏற்ப வரையறை செய்கிறது. இப்படிப்பட்டவர்கள் திருட்டில் ஈடுபடும்போது அவர்கள் மாநிலம், அடுத்த மாநிலம் என்று பார்க்கமாட்டார்கள். அவர்களுக்கு எங்கு வாய்ப்புக் கிடைக்கிறதோ அங்கெல்லாம் திருட்டில் ஈடுபடுவார்கள். தமிழ்நாட்டிலும் திருடர்கள் இருக்கிறார்கள். புலம்பெயர்ந்து போன தமிழர்களும் பல்வேறு திருட்டில் ஈடுபடுகிறார்கள். அதனால் புலம்பெயர்வதால் திருடுகிறார்கள் என்று கூற முடியாது.

அமெரிக்காவைவிட நாணய மதிப்பு டாலர் மதிப்பு இங்கிலாந்து பவுண்டு மதிப்பு அதிகம். அப்படிப்பட்ட நாட்டில் திருடுகிறார்கள் என்றால் திருட்டு என்பது பதுக்கலுக்கான கலகக் குரல் என்பது மார்க்சியம் வரையறுத்தது சரியாகத்தான் உள்ளது.

அதனால் நாம் திருட்டை ஆதரிக்க முடியாது. ஆனால் திருட்டைத் தடுப்பது நம் அரசின் கடமை. மக்களுக்குச் சேரவேண்டியதைச் செய்யாமல் வளர்ச்சியைப் பரவலாக்காமல் நாட்டின் ஒரு பகுதியை வளர்த்து விடுவதும் இன்னொரு பகுதியை வஞ்சிப்பதும் நியாயம் கிடையாது. இந்த மாதிரி சமமான வளர்ச்சி இல்லாமல் இருக்கும்போது உள்நாட்டுக் குழப்பத்தைத் தடுக்க முடியாது. உள்நாட்டுத் தொழிலாளர்கள் மற்ற நாட்டுத் தொழிலாளர்களுடன் போரிட்டு உள்நாட்டு மோதல் ஏற்பட இது வழிவகுக்கும் என்பதை எச்சரிக்கை செய்கிறோம். இதற்குக் காரணம் வடநாட்டுத் தொழிலாளர்கள் இல்லை. கார்ப்பரேட்டுகளும் அந்தந்த மாநில கைகூலி அரசுகளும் ஒன்றிய அரசுமே இதற்குக் காரணம். அதை மறைக்கத்தான் மத உணர்வைத் தூண்டிவிட்டு அவர்களை முட்டாள்களாக ஆக்குகிறார்கள். வட மாநிலத்தைச் சேர்ந்தவர்களை இது மாதிரி முட்டாள்களாக வைத்திருப்பதால்தான் அவர்கள் புலம்பெயர்கிறார்கள்.

தமிழ்நாட்டு அரசுதான் வடமாநிலத் தொழிலாளர்களைக் கண்காணிக்க வேண்டும். தமிழ்நாட்டு அரசு வடமாநிலத் தொழிலாளர்களைக் கண்காணிக்க முடிவுசெய்து அவர்களின் விவரங்களைத் துல்லியமாக கண்காணிக்க முடிவுசெய்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஏனென்றால் இந்த மாதிரி அப்பாவி மக்களை வைத்துக்கொண்டு ஆர் எஸ் எஸ், பஜ்ரங்தள் போன்ற பயங்கரவாதிகள் இவர்களைப் பயன்படுத்திக் கொண்டு கலவரம் செய்யக்கூடும்.

அதுபோன்று ஆபத்து இருப்பதால் இவர்களைக் கட்டாயம் கண்காணிக்க வேண்டும். வட மாநிலத் தொழிலாளர்களுக்குத் தமிழ்நாட்டில் மூன்று வேளை உணவும் 300 ரூபாய் கூலியும் கொடுத்தால் அது அவர்களுக்கு சொர்க்கமாகத் தெரிகிறது.

30 ஆண்டுகள் இந்திய மார்க்சிஸ்ட் கட்சி ஆட்சி செய்த மேற்கு வங்காளத்தில் கல்கத்தாவின் நிலைமை மிகவும் கொடுமையானது. நம் ஊர்களில் கட்டிட வேலைக்கு வந்து கும்பலாக நிற்பார்கள். அவர்களில் விருப்பம் உள்ளவர்களை வேலைக்கு அழைத்துச்செல்வார்கள். வேலை தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்றால் கட்டிட மேஸ்திரியை வைத்துக் கொள்ள வேண்டும். அதுபோல் கல்கத்தாவில் 13 வயது பெண் என்ன வேண்டுமானாலும் பண்ணிக்கொள்ளுங்கள். 25, 50, 100 ரூபாய் ஏதோ கொடுங்கள். வீட்டில் அம்மா அப்பா பட்டினியாகக் கிடக்கிறார்கள் என்று சொல்கிறார் என்றால் எந்தளவிற்கு வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது. 13 வயது குழந்தை அப்படி சொல்லும் நிலையில் இன்றும் கல்கத்தா உள்ளது. அதைக் கேள்விப்பட்டு நெஞ்சம் பதைபதைக்கிறது. அதேபோன்று அரியானாவிலும் இதே நிலைதான். சாலையில் வந்து நின்று கொண்டு கூப்பிடும் நிலை உள்ளது. வட மாநிலங்களில் பெரும்பாலும் இது போன்ற நிலை உள்ளது. இதுபோன்ற காரணங்களால் இங்கு வருகிறார்கள் என்பதையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

### ஈழத் தமிழர்களையும் சுதந்திரமாக வாழவிடு:

ஈழத் தமிழர்களைத் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் திறந்தவெளி முகாம்களில் அடைத்து வைத்திருக்கிறார்கள். இது என்ன அநியாயம், ஈழத் தமிழர்களையும் சுதந்திரமாக வாழக் குடியுரிமை கொடுக்க வழிவகை செய்ய வேண்டும். வடமாநிலத் தொழிலாளர்கள் சாதாரணமாக வந்து குடியேறும்போது, ஈழத் தமிழர்களை மட்டும் திறந்தவெளி முகாம்களில் அடைப்பது கண்டனத்துக்குரியது. ஈழத் தமிழர்களும் பஞ்சம் பிழைக்கத்தான் வருகிறார்கள். அவர்களைப் பயங்கரவாதிகள் போல் கிழக்குக் கடற்கரைச் சாலையில் தமிழ்நாட்டுக் காவலர்கள் முகாமிட்டு கைது செய்து விசாரித்து முகாம்களில் அடைத்துவிடுகிறார்கள். இதுபோன்ற செயல்களைக் கண்டிக்கிறோம்.

உழைக்கும் மனித குலத்தை விடுவிக்க மாற்று மருந்து சோசலிசமே என்பதைத் தவிர வேறு வழி இல்லை. அவர்களை விரட்டி அடிப்பதால் தீர்வு கிடைக்காது. நமக்கும் இதுபோன்ற நிலை விரைவில் வரக்கூடும் என்பதில் சந்தேகம் இல்லை. பல்வேறு பொறியியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை இல்லாமல் இழுத்து மூடும் நிலையும் ஐடி கம்பெனிகளில் ஆள்குறைப்பு போன்ற சம்பவங்கள் நமக்கு எதிர்காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை சில ஆண்டுகளில் வரக்கூடும் நிலையும் உள்ளது. தமிழகத்தில் கடந்த காலங்களில் வறட்சி, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற காரணங்களால் வெவ்வேறு காலகட்டங்களில் தமிழ்நாட்டிற்குள்ளேயும் கேரளாவிற்கும் வெளிநாடுகளுக்கும் புலம் பெயர்ந்தும் பஞ்சம் பிழைக்கச் சென்ற வரலாறு உண்டு.

### வடமாநிலத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை கொடுக்காதே!

உலகில் ஏழை மற்றும் வளர்ந்துவரும் நாடுகளில் வறட்சி, வேலை வாய்ப்பு இல்லாத நிலை அரசின் ஊழல், கனிமவளக் கொள்ளை அதனால் ஏற்பட்டுள்ள இயற்கை மாற்றங்கள் ஆகிய காரணங்களால் மக்கள் புலம்பெயருகிறார்கள்.

அதுபோல் உலகின் சில முன்னேறிய நாடுகளுக்கு மக்கள் புலம்பெயருகிறார்கள். அப்படிக் கனடாவிற்கும் புலம்பெயருகிறார்கள். கனடாவிற்குள் வெளிநாட்டினரின் குடியேற்றம் 2022□இல் 4,31,000 ஆக இருக்கிறது. இது மேலும் உயர்ந்து கொண்டே உள்ளது. இது 2023, 2024□இல் 9,00,000 புதியவர்கள் வருவார்கள் என்று கணக்கிடுகிறார்கள். இதுபோன்ற குடியேற்றம் காரணமாகக் கடந்த 50 ஆண்டுகளில் கனடாவில் மக்கள் தொகை இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது என்று கனடாவின் புள்ளியியல்துறை தெரிவித்துள்ளது. இதன் காரணமாக அங்கு வீடுகளின் விலையேற்றம் உயர்ந்துள்ளது. கனடாவில் `ரியல் எஸ்டேட்' சங்கத்தின் தரவுகளின்படி கடந்த வருடத்தில் மட்டும் ஒரு குடும்பம் தனித்தனியாக வசிக்கும் வீட்டின் விலை இரட்டிப்பாகியுள்ளது என்று குறிப்பிடுகிறது. இதுபோன்று பல்வேறு மாற்றங்கள் அங்கு ஏற்பட்டுள்ளதற்குக் காரணம் புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கை கனடா மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கிற்குமேல் உள்ளதுதான் காரணம்.

குடியிருக்க வீடு பற்றாக்குறை, நகர நிர்வாகம், சாலை, குடிநீர், உணவு உற்பத்தி மற்றும் சட்டம் ஒழுங்கு இன்று கனடாவிற்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது. அதேபோல் அமெரிக்காவில் தெற்கு எல்லை வழியாக நாட்டிற்குள் நுழையும் புலம் பெயர்ந்தோரின் எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ள நிலையில் இருக்கும் மக்களை விட அதிகமான புலம் பெயர்ந்தோர் இருப்பது குறித்துப் பரவலாக மக்களிடம் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டிலும் இதுவரை ஏறத்தாழ இரண்டு கோடிப்பேர் வடமாநித்தவர்கள் புலம் பெயர்ந்து இருப்பதாக புள்ளி விவரம் கூறுகிறது. இந்த இரண்டு கோடிப் பேருக்கும் வாக்குரிமை வழங்குவதில் சிக்கல் உள்ளது. வாக்குரிமை இப்போதைக்கு வழங்கக் கூடாது என்பதுதான் நமது நிலைப்பாடு. தமிழ்நாட்டில் இருப்பதில் சிக்கல் இல்லை. வாக்குரிமை கொடுக்கக்கூடாது என்னும் நிலைப்பாடு மார்க்சியப்படி மேலோட்டமாகத் தவறாகத் தெரியும். அதனால் தத்துவத்தை நடைமுறையுடன் பொருத்திப்பார்க்க வேண்டும். இந்த மண்ணின் அரசியல், இடஒதுக்கீட்டுக் கொள்கை, சமூகநீதி, சமத்துவம், சகோதரத்துவம், முற்போக்குக் கொள்கை, பெரியாரியம், கல்வி மேம்பாடு, இந்த மண்ணின் சுதந்திரம் போன்ற கொள்கைகளைப் பின்பற்றக் கூடிய முன்னேறிய மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது.

ஆனால் வடமாநிலத்திலிருந்து வருபவர்கள் இவற்றுக்கு நேர் எதிர் மாறாக உள்ள பண்பாட்டு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பின்தங்கிய மாநிலத்தில் இருந்து வருகிறார்கள். அவர்களை அரசியல்படுத்தாமல் குடியுரிமை கொடுத்தால் அவர்களின் அறியாமையை பயன்படுத்திக் கொண்டு இங்குள்ள பா.ஜ.க. மற்றும் சில வலதுசாரிகள் அவர்களைப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடிக்கும் கேடும்(அபாயமும்) நடக்க வாய்ப்புள்ளது. அவர்களுக்குக் குடும்ப அட்டை கொடுத்து அதன்மூலம் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வாங்கிக்கொள்வதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் வாக்குரிமை கொடுக்கக்கூடாது. ஏனென்றால் அவர்கள் நிரந்தரமாக இங்கு தங்கி வாழப்போகிறார்களா அல்லது சில ஆண்டுகள் இருந்துவிட்டு செல்லப்போகிறார்களா என்பது நமக்குத் தெரியாது. ஆகவே குடியுரிமை முற்றிலும் கொடுக்கக்கூடாது என்பது நமது நிலைப்பாடு. இல்லை இதுபோன்ற காரணங்களால் தொடர்ந்து பல பத்தாண்டுகள் தமிழ்நாட்டில் தொடர்ந்து தங்கி இருந்திடும் சூழல் ஏற்பட்டால் அதையும் வரையறைப்படுத்தி நெறிப்படுத்தியே அவர்களுக்குக் குடியுரிமை கொடுக்க முடியும்.

# நாங்குநேரி - ஏன்? மாற்றம் எப்படி?..

நாங்குநேரி நிகழ்வு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என அனைவரையும் அதிர வைத்திருக்கிறது. மாணவன் சின்னத்துரையை வெட்டிய மாணவர்களின் பெற்றோர்களுள் சிலர் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதோடு ஆர் எசு எசு வழி மதவெறி அரசியல் கொண்டவர்களும் ஆவர்....

1960 களில் கல்லூரிகள், பல்கலைக் கழகங்களில் எல்லா மாணவர்களும் கைகோர்த்து இணைந்து தமிழ் மொழியின் விடுதலைக்காகவும் சமூக நீதிக்காகவும் போராடினர்... இன்று பள்ளிகள், கல்லூரிகளில் மாணவர்கள் கைகோர்த்து சாதியாய் இணைந்து ஆயுதங்கள் எடுக்கிறார்கள்,

ஒரு பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் இன்னொரு ஆசிரியரிடம், ஒரு சில மாணவர்களைக் காண்பித்து 'இவர்கள் எல்லாம் எங்க ஆளுங்க பாத்துக்கங்க' என்று வெளிப்படையாகச் சொல்லும் நிலை இன்று உள்ளது. பெரும்பாலான ஆசிரியர்களிடையேகூட இந்தச் சாதிப் பாகுபாடு மேலோங்கி இருக்கிறது.

ஒரு ஆசிரியர் ஒரு பள்ளிக்குப் புதிதாகப் பணிபுரிய வந்தால் உடனே மற்ற ஆசிரியர்கள் அலுவலகத்திற்குள் சென்று புதிய ஆசிரியரின் பணிப் பதிவேட்டின் முதல் பக்கத்தில் அவரின் சாதி உள்ளிட்ட எல்லா தரவல்களையும் தேடிப் பார்க்கிறார்கள்.. ஆசிரியர்கள் பலர் அந்தக் காலத்தில் சாதி மறுப்புணர்வில், பகுத்தறிவுணர்வில் இருந்தனர்.. ஆனால் இன்று பலர் சாதிச் சங்கங்களிலும், சங்பரிவார் இயக்கங்களிலும் இருந்து சாதி, சமய வெறியினராக உள்ளனர்.

தலைமை ஆசிரியர் எந்தச் சாதியோ அந்தச் சாதி சார்ந்த ஆசிரியர்கள் செல்வாக்காக இருப்பார்கள். இந்த வகையில் மாணவர்களிடமும் இந்தச் சிக்கல் உருவாகியுள்ளது. சில பள்ளிகள் சேரிப் பகுதியிலும், சில பள்ளிகள் ஊர்ப் பகுதியிலும், இன்னும் சில பள்ளிகள் பொது இடங்களிலும் உள்ளன. ஊர் மற்றும் பொது இடங்களில் உள்ள பள்ளிகளில் ஆதிக்கச் சாதியினரின் செல்வாக்கு அதிகமாக இருக்கும். சேரி பகுதியில் உள்ள பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்களின் செல்வாக்கு அதிகமாக இருக்கும். மாணவர்களிடத்தில் சாதிப் பாகுபாடு மேலோங்கி இருப்பதற்கு மிகப்பெரும் காரணம் சாதியச் சமுகமே.. இப்போதைய நிலையில் வெளிப்படையாகவே சாதியைச் சங்பரிவார் இயக்கங்கள் தூண்டி வளர்க்கின்ளன.. மாணவர்கள் சாதிஅடையாளங்கள் தெரிகிறபடி அடையாளப்படுத்திக்கொள்கின்றனர்.

பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளுக்குச் சாதி மனநிலையை உருவாக்குகிறார்கள். ஆசிரியர்களும் இந்த மனநிலையைப் போக்குவதற்கு வழிவகை செய்வதில்லை. திருவள்ளுவர், வள்ளலார், பெரியார் அம்பேத்கர் குறித்தோ, சமுக விழிப்புணர்வோடோ பாடங்களைச் சரிவர நடத்துவதில்லை. காவல்துறையினரும் மாணவர்களிடத்தில் பாகுபாடு காட்டுகிறார்கள்.

பள்ளிகளில் பெற்றோர் ஆசிரியர் கழகம், பள்ளி மேலாண்மைக் குழு உள்ளன போல் இந்தச் சாதிய பாகுபாட்டைப் போக்க எந்த வகையான குழுவும் இல்லை.

1. ஒவ்வொரு பள்ளியிலும் தலைமை ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர், பெற்றோர்கள், காவல் துறை ஆய்வாளர், நீதிபதி உள்ளிட்டோரைக் கொண்ட குழு ஒன்றை அமைக்க வேண்டும். அந்தக் குழு ஒவ்வொரு மாதமும் கூடி அந்தப் பள்ளியில் ஏதாவது சாதித் தொடர்பான பாகுபாடு நடந்ததா என்று கூடிப் பேசி ஆய்வு செய்ய வேண்டும்.

2. பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் கூடி எங்கள் பிள்ளைகள் படிக்கின்ற இந்த பள்ளியில் 'சாதிப் பாகுபாடு பார்ப்பதில்லை' என்கிற அறிவிப்பு பலகையை வைக்க வேண்டும்.

இப்படியான ஒடுக்கு முறைகள் நடக்கும்போது அதில் ஈடுபடுகின்ற ஆதிக்கச் சாதி மாணவர்களைப் பள்ளியை விட்டு நீக்க வேண்டும் என்ற ஒரு சிலரின் கருத்து ஏற்புடையதல்ல. அது மேலும் இந்தச் சிக்கலை அதிகமாக்கும். ஆகவே மேற்கண்ட குழுக்களை அமைத்து தமிழ்நாடு முழுக்க எல்லா ஊர்களிலும் இப்படியான நிகழ்வுகளை இனிமேல் நடக்கக்கூடாது என்று உறுதி ஏற்க வேண்டும். தமிழ் உணர்வும், குமுகப் பொறுப்புணர்வும் வளர்க்கப்படவேண்டும்

● அநிமண்

# நாங்குநேரி - சிந்தனைக்குச் சில..

நாங்குநேரியின் தாக்கத்திற்குப் பிறகு குமுக அளவில் தேவையான சில நடைமுறை மாற்றங்கள் முன்மொழியப்படுகின்றன.. இவை குறித்த ஆய்வுகள் தேவை..

• கல்விக்கூடங்கள் அனைத்திலும் சாதி மத அடையாளங்கள் முற்றிலுமாகத் தடை செய்யப்பட வேண்டும்..

• நல்லொழுக்கம் என்கிற பெயரில் கல்விக் கூடங்களில் மதப்பரப்பல் நிகழ்ச்சிகள் எவையும் இருத்தல் கூடாது..

• கல்விச் சான்றிதழ்களின் பதிவுகளில் சாதிப் பதிவுக்கு மாறாக குமுக, பொருளியலில் ஒடுக்கப்பட்டிருக்கிற, இடைநிலையிலிருக்கிற முன்னேறியிருக்கிற வகையினரைக் குறிக்கும் அளவில் வகுப்புக்குறியீடுகள் மட்டுமே அடையாளப்படுத்துதல் நல்லது...

• தீவிரச் செயல்பாட்டாளர்களைக் கவனிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும் தனி உளவுத்துறைகள் இருப்பது போல் குமுகத்தைச் சீரழித்து வரும் சாதி, மத வெறி போக்குகளைக் கவனிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுப்பதற்கும் தனித்த உளவுத்துறை அமைக்க வேண்டும்

• ஒவ்வொரு கல்விக் கூட்டங்களையும் கவனிப்பதற்கு என்று ஆசிரியர், பெற்றோர், அரசுத்துறை அதிகாரிகள், வழக்கறிஞர்கள் உள்ளிட்டோர் கொண்ட குழு ஒவ்வொரு மாதமும் கல்விக்கூடங்களை ஆய்வு செய்திடல் வேண்டும்..

• அறிவியல் கருத்துகள், குமுக ஒற்றுமைக்குரிய கருத்துகள், மூடநம்பிக்கைகளுக்கு எதிரான கருத்துகள் பாடத்திட்டங்களிலேயே கொண்டு வரப்பட்டு விரிவாக மாணவர்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டும்

இவை மட்டுமின்றி கூடுதலாக அனைவரும் சிந்திக்கிற செய்திகளை 'தமிழ்நாடு' இதழ் எதிர் நோக்குகிறது.. அவற்றையெல்லாம் தொகுத்துச் சிறு வெளியிடாக்கி நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தத்தைக் கொடுத்தாக வேண்டும்.

# தமிழ்த் தேசிய இனம் என்பது சாதிகளின் தொகுப்பு அல்ல!

சாதிகள் இருக்கும்வரை தமிழ்த்தேசிய இன உருவாக்கம் முழுமையடையாது! தேசிய இனம் என்பது வரலாற்றின் விளைபொருள். ஓர்மை உணர்வுடைய தமிழ்த்தேசிய இனமாக உருவெடுத்தால்தான் விடுதலை நோக்கி நகர முடியும். அதுவரை இறையாண்மையுள்ள தமிழ்த்தேசம் அமையாது!

வருண□சாதி முறையை எதிர்த்து எத்தனையோ மகான்களும், மகாத்மாக்களும் கடந்த 2000 ஆண்டுகளாகப் போராடி இருக்கிறார்கள். ஆனால், சனாதனத்தின் மேலாண்மையைச் சாதிகளின் பேரால் நிகழ்த்தப்பட்ட வன்மங்களைத் தடுக்க முடியவில்லை.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னை மாகாணத்தில் சாதி ஒடுக்கு முறைகளை எதிர்த்து அயோத்திதாசப் பண்டிதர் உள்ளிட்டோர் ஆதிதிராவிடர் என்ற அடையாளத்தை உயர்த்திப் பிடித்தனர். பார்ப்பனியத்தை எதிர்த்து தமிழ், தெலுங்கு, மலையாளம் பேசிய தலைவர்கள் இணைந்து ஒரு புதிய தொடக்கத்தைக் கொடுத்தார்கள். அதில்தான் பார்ப்பனர் □ அல்லாதோர் இயக்கம் பிறந்தது. அதுதான் திராவிட இயக்கம் என்று பெயர் பெற்றது.

அன்றைய சூழலை டி.எம். நாயர் விவரிக்கும் போது நமக்குக் குடல் பதறுகிறது. 1930 களில் ஒடுக்குமுறை வடிவம் எப்படி இருந்தது என்பதை அண்ணல் அம்பேத்கர் விவரித்திருக்கிறார். கேரளாவில் திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்கு உட்பட்ட பகுதிகளில், தென்தமிழ்நாட்டின் பகுதிகளில், ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டிலுமே ஒடுக்குமுறை வடிவங்கள் எப்படி இருந்தன என்று படிக்கும்போது வேதனையாக இருக்கிறது. தமிழ்நாட்டிலும் ஒடுக்கப்பட்ட, சூத்திர சாதி, வேறு சில சமூகங்களும் அடைந்த கொடுமைகளைக் கற்பனை எண்ணிப் பார்க்க முடியவில்லை.

இந்நிலையில்தான் 1920களில் திராவிட இயக்கம் தன் வரலாற்றுப் பங்களிப்பைச் செய்தது. திராவிடம் என்ற சொல் பிடிக்காதவர்கள் இருக்கலாம். அது பற்றி கவலை இல்லை. ஆனால் எவ்வளவு பெரிய காரியங்களை அது செய்து முடித்தது என்பதை வரலாற்றின் ஏடுகளில் படித்து விட்டுத்தான் ஒருவர் பேச வேண்டும்.

50 ஆண்டுகளில் எதையோ இழந்து விட்டதாகச் சிலர் பேசுகிறார்கள். எதை இழந்தார்கள்? நூறு ஆண்டுகளுக்கு முன்பு இன்றைய ஒடுக்கப்பட்ட மற்றும் சூத்திர சாதிகளுக்கு என்ன இருந்தது?.. திராவிட இயக்கம் என்பது கலைஞர் கருணாநிதி அவர்களின் குடும்பமோ அல்லது அம்மையார் செயலலிதா அவர்களின் கட்சியோ அல்ல. அவை தேர்தல் கட்சிகள். ஆனாலும் திராவிட இயக்கத்தின் கடந்த கால இலக்குகளை ஓரளவுக்கு நிறைவு செய்ய இக்கட்சிகள் முயற்சித்து இருக்கின்றன.

திராவிட இயக்கம் என்ற உடனேயே நஞ்சை கக்குகிறவர்கள் ஏதும் அறியாதவர்கள். சென்ற நூற்றாண்டில் இங்கு இருந்த நிலை என்னவென்று அறிய மாட்டார்கள். அந்த ஒடுக்குமுறைகளை மாற்ற திராவிட இயக்கம் பெரும் பங்களிப்பு செய்திருக்கிறது. சில சாதி மோதல்களைக் குறிப்பிட்டு இதெல்லாம் நடந்தது என்பார்கள், அவை நடந்தவை என்பது உண்மைதான். ஆனால் சாதிய ஒடுக்குமுறைகளையும் பார்ப்பனியத்தையும் திராவிட இயக்கம் எதிர்கொண்ட விதத்தைக் கண்டு அண்ணல் அம்பேத்கர் பேரன்பு கொண்டார். 1950களில்கூட, ஒடுக்கப்பட்ட சாதிகளின் பெயரைச் சொல்லி குஷ்டரோகிகளும் குறிப்பிட்ட சாதிகளும் உள்ளே வரக்கூடாது என்று வாசலில் பலகை வைத்திருக்கக் கூடிய உணவு விடுதிகள் நாடு முழுவதும் இருந்தன. அந்த விடுதிக்காரர்களுடன் திராவிட இயக்கத்தவர்கள் மோதியதை நேரிலும் பார்த்திருக்கிறேன்; பெரியவர்கள் சொல்லவும் கேட்டிருக்கிறேன். வன்முறையின் மூலம் பல கதவுகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் திறக்கப்பட்டன. இயக்கமாகவும் செயல்பட்டார்கள்; அடிதடியிலும் இறங்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காகச் சூத்திர சாதி மக்களுக்காகத் திராவிட இயக்கத்தவர் நின்றதை நாம் கண்ணாலேயே பார்த்திருக்கிறோம்.

1950க்கு முன்னால் என்ன சாதிக்கப்பட்டது, அதற்குப் பின்னால் என்ன சாதிக்கப்பட்டது என்று பட்டியலிடுவது நம் நோக்கமல்ல. திராவிட இயக்கத்தின் செயல்பாடுகளால் தளர்ச்சி அடைந்திருந்த பார்ப்பனியம் இப்போது இந்துராஷ்டிர படைப்பிற்காக முழு பலத்துடன் எழுந்து நிற்கிறது. அதற்கான அஜெண்டாவை நடைமுறைப்படுத்துவதற்குப் பல்வேறுக் கட்சிகளும் அமைப்புகளும், ஆர்எஸ்எஸ், பாஜகவோடு உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றன. இந்நிலையில்தான், தளர்ச்சி அடைந்திருந்த சாதிய உணர்வு முடுக்கிவிடப்படுகிறது. சாதி வெறியாட்டம் இப்போது வளர்ந்து கொண்டிருக்கிறது. இப்போதும் திராவிட இயக்கத்தவர்கள்தாம் இரட்டைக் குவளை முறையை எதிர்த்து மக்களிடையே பிரச்சாரம் செய்து இயக்கமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

திராவிடக் கட்சிகள் ஆட்சிக்கு வந்த பிறகுதான், கடந்த 50 ஆண்டுகளுக்குள் ஏதோ இழந்து விட்டதாகவும், இப்போதுதான் இது போன்ற சாதிவெறி தாக்குதல்கள் நடப்பதாகவும், சிலர் பதிவிடுவதைப் பார்க்கிறேன். இவர்கள் அடிப்படையில் சாதிப்பற்றாளர்கள். இந்திய வல்லாதிக்கத்திற்குள் மாநிலத்தில் கங்காணி அமைச்சர் பதவிக்காக ஆளாய்ப் பறக்கிறவர்கள். இவர்களைத் தங்கள் ஆதரவாளர்களாய் வைத்திருக்கிறார்கள்.

இங்குச் சட்டம் போட்டுச் சாதியைத் தடை செய்ய வழியில்லை. ஏனென்றால், இந்திய அரசு அதைச் செய்யாது; அப்படிச் செய்ய தமிழக அரசுக்கு அதிகாரம் கிடையாது. சாதி சமத்துவத்துக்கான திட்டங்களை மட்டுமே நடைமுறைப்படுத்திக் கொள்ள முடியும்.

சாதி வெறியைப் போக்க முடியும் என்றால் புத்தர் வென்று இருப்பார்; வள்ளலார் வென்று இருப்பார்; சாதியக் கட்டமைப்பை ஒரேயடியாக ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதுதான் நம்முடைய கோரிக்கையும் இலக்கும். இந்தியாவுக்குள் இருக்கும் வரை சாதியை ஒழிக்க முடியாது என்பதால்தான் பெரியார் தனிநாடு கோரினார். அதற்குரிய சட்டத்தை இந்தியாவுக்குள் இயற்ற முடியாது; சுதந்திரத் தமிழ்நாட்டில் இயற்ற முடியும் என்று கருதினார்.

1920 லிருந்து நீதிக் கட்சி சென்னை மாகாணத்தில் அதிகாரத்துக்கு வந்த பிறகுதான், பார்ப்பனர் அல்லாதோர் அனைத்துச் சாதியினருக்கும் அரசு பதவிகளும், அதிகார இருக்கைகளும் பங்கிடப்பட்டன. கல்வி வாய்ப்புகள் திறந்துவிடப்பட்டன. மிகப் பெரிய மாற்றம் தொடங்கியது.

1927 இல் இனி பெயருக்குப் பின்னால் சாதியைப் போடுவதில்லை என்று சுயமரியாதை இயக்கத்தவர் முடிவு செய்து அதையே ஒரு வாழ்க்கை முறையாக்கினார்கள். சாதியற்று, மதமற்று, இறை நம்பிக்கையற்று, சடங்குகளற்று, ஏற்றத்தாழ்வு பார்க்கும் உளவியல் அற்று, வாழக்கூடிய ஒரு புதிய முறையைப் படைத்தார்கள். இன்று நாம் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு அது அன்று பெருவீச்சாக வளர்ச்சி அடைந்தது. தமிழ் மாவட்டங்களில் அந்த இயக்கத்தின் குரலுக்குப் பெரிய வலிமை உருவாகி இருந்தது. 1928 இலிருந்து 1938 வரை 10 ஆண்டுகளில் 25 ஆதித் திராவிடர் மாநாடுகளை மாகாண அளவிலும் மாவட்ட அளவில் பெரியார் நடத்தினார். திராவிடர் □ ஆதித் திராவிடர் ஓர்மை இலக்கை இம்மாநாடுகள் முன் வைத்தன.

பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களை மேம்படுத்தும் சட்டங்கள் வகுக்கப்பட்டன; பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இவை 1920 -க்கு பிறகு அனைவரும் சாதியைப் புறக்கணித்து விடவில்லை. சாதிகளுக்கானக் கட்சிகளை நடத்தினாலும் கூட தங்கள் பெயருக்குப் பின்னால் சாதியைப் போட்டுக் கொள்ள மாட்டார்கள். இது பல்வேறு சமூகங்களிடையே ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தியது. வேறுபாடு குறைந்தது,

ஆனாலும் சாதிய ஒடுக்குமுறைகளும் பாரபட்சமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. புதிதாகத் தோன்றிய திராவிட இயக்கம் எல்லோரையும் அப்படியே கட்டுப்படுத்தி சர்வாதிகாரமாகத் தன் வழிக்குக் கொண்டு வந்து விட முடியாது. ஆனால் அது பேசிய சமூக சனநாயகம் எல்லா கட்சிகளையும் தொட்டது; எல்லா சமூகங்களையும் தொட்டது. அக்ரகாரத்திலிருந்து மொட்டை அடிக்கப்பட்டு வெள்ளைப் புடவைச் சுற்றி ஒதுக்கி வைக்கப்பட்ட விதவைப் பெண்களும்கூட தங்களுக்கான, தாங்கள் நடத்தப்பட்ட விதத்தில் ஒரு மாற்றத்தைப் பெற்றார்கள். ஆங்கிலேயர் ஆட்சி இதற்குப் பேருதவியாக இருந்தது. அது எந்த மாகாணத்திலும், எந்த காலத்திலும் பார்த்திராத ஒரு சமூக மாற்றம் சென்னை மாகாணத்தில் உருவானது.

திராவிடத் தேர்தல் கட்சிகளின் மீது நாம் காணக்கூடிய குறைபாடு என்ன? அடிப்படை திராவிடக் கொள்கையிலிருந்து சரிந்து போனார்கள் என்பதுதான். இவர்களிடம் இருக்கக்கூடிய பிழைகளை, குறைகளை மறைக்கத் தேவையில்லை. இவர்களிடம் குறைகள் இருப்பதால்தான் இந்தத் தேர்தல் கட்சிகளை அந்தந்தக் கட்சிக்காரர்களைப் போல அனைவரும் ஆதரித்துவிடுவதில்லை. திராவிட இயக்கங்களில் உள்ளவர்கள்கூட பலர் சாதி முறையைப் பேணுகிறவர்களாக இருக்கிறார்கள் என்பது உண்மைதான். இது ஒரு சரிவு.

ஆனாலும், கடந்த காலத்தில் திராவிட இயக்கம் ஏன் தோன்றியது? அன்றைய சூழ்நிலை என்ன? அதை மாற்றியமைக்க திராவிட இயக்கங்களும், அதிகாரத்திற்கு வந்த கட்சிகளும் என்ன பங்காற்றி இருக்கின்றன என்பதை அறியாதவர்கள்தான் திராவிட இயக்கத்தைக் குறை கூறுவார்கள். இந்தியாவில் பிற மாநிலங்களைவிட பல்வேறு நிலைகளில் தமிழ்நாடு முன்னிலை வகிப்பதற்குக் காரணம் இந்த கட்சிகள்தாம். ஆனால் இலஞ்சமும் ஊழலும் இந்திய சனநாயகத்தில் பிற கட்சிகளைப் போலவே இக்கட்சிகளிலும் மலிந்து இருக்கின்றன என்பதும் உண்மைதான்.

ஆனாலும் பிற வட மாநில தேசியக் கட்சிகளுக்கும் தமிழ்நாட்டில் கடந்த காலத்தில் அதிகாரம் செலுத்திய திராவிடக் கட்சிகளுக்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது. சமூகநீதி என்பது தமிழ்நாட்டில் நிலைநிறுத்தப்பட்டது. ஒடுக்கப்பட்ட அருந்ததியர்களுக்கு மூன்றரை சதவீதம் உள் ஒதுக்கீடு, இஸ்லாமியர்களுக்கு 3 சதவீதம் இட ஒதுக்கீடு என்பது இச்சமூகங்களை மேல் நோக்கி வளர்த்தெடுத்து இருக்கின்றன. தமிழ்நாட்டில் 69 விழுக்காடு இட ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமூகங்களை உயர்த்தி இருக்கிறது.

இந்நிலையில்தான் திடீரென்று நிலைமை தலைகீழாக மாறிக்கொண்டிருக்கிறது. இன்று சங்பரிவார் அமைப்புகளும், ஆர்.எசு.எசும், பாஜகவும், துணை அமைப்புகளும் இந்து ராஷ்டிர உருவாக்கப் பணியில் களமிறங்கி நிற்கின்றன. தமிழ்நாட்டில் பல கட்சிகள் அவர்களோடு உறவாகி இருக்கின்றன, பலர் நேரடி முகவர்களாகவும், மறைமுக முகவர்களாகவும் மாறி இருக்கிறார்கள்.

எந்த இனமும் அதற்குள் இருக்கக்கூடிய சமூக மேல் - கீழ் பிரிவுகளை ஒழித்துத் கட்டி, ஓர்மையைப் பெற்றால்தான் அது தேசியம் என்ற நிலையைப் பெறும்.. தேசியம் என்பதன் உருவாக்கத்தின் வரலாற்றைப் படித்தவர்களுக்கு அது புரியும். இந்நிலையில் திடீரென்று "குடிவழித் தேசியம்". என்றும், இங்குள்ள சாதிகளின் ஒருங்கிணைப்பே தமிழ்த்தேசியம் என்றும் பேசுவது வியப்பாக இருக்கிறது. அடிப்படையில் தேசியம் என்பது என்னவென்றே தெரியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதுதான் இதற்குப் பொருள்.

பெயருக்கு பின்னால் சாதியைப் போட்டுக் கொண்டால் உனக்கு என்ன பிரச்சனை? என்கிறார்கள். சாதி நல்லது என்கிறார்கள்; அது நல்ல சொல் என்கிறார்கள். இந்தியாவை இந்துராஷ்டிரமாக மாற்ற அத்தனை முயற்சிகளும் நடந்து கொண்டிருக்கும் நிலையில், சாதிய உணர்வுகள் இப்போது புத்துருவாக்கம் செய்யப்படுகின்றன. சனாதனம் உயர்த்திப் பிடிக்கப்படும் இன்றைய நிலையில் சூத்திர சாதிகள் சாதி உணர்வூட்டப்படுகின்றன. சாதி உணர்வு ஊட்டப்படுகிறவர்களுக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது புரியாமல் இருக்கலாம். சாதி உணர்வானது இப்போது புதுப்பிக்கப்படுகிறது. கடந்த காலங்களில் சாதி மோதல்கள் நடந்திருக்கின்றன. ஆனால் வடிவமைக்கப்பட்ட ஆணவக் கொலைகள் போன்ற புது வடிவங்கள் 50 ஆண்டுகளுக்கு முன்பு இல்லை. இப்போது சாதியவாதிகள் அது தங்கள் பெருமையைப் பறைசாற்றுவதாகக் கருதுகிறார்கள்.

கடந்த காலத்தில் சாதி ஒழிப்பு பற்றிப் பேசி அதற்கான உளவியலைத் தோற்றுவித்த தந்தை பெரியார் போன்றவர்களை இழிவுபடுத்தும் போக்கு இந்துராஷ்டிர உருவாக்கத் தளத்திலிருந்துதான் எழுந்தது.பெரியாரை அவதூறு செய்ய எவரும் சான்றுகள் காட்ட வேண்டுமே என்று கவலைப்படுவதில்லை. சாதிகளை மறுத்தார் என்ற ஒரே காரணத்திற்காக அவ்வளவு காழ்ப்புணர்வு அவர் மீது இருக்கிறது.

சாதி என்ற சொல் வெறுக்கப்பட்டதால் அதைக் குடி என்று மாற்றிப் பயன்படுத்துகிறார்கள். சாதி என்பது எவ்வளவு துன்பங்களை இந்தத் தமிழ் சமூகத்திற்கு வழங்கி வந்திருக்கிறது என்பதை வரலாற்றின் ஏடுகளில் பார்த்தால் புரியும். இந்நிலையில் சாதிக்குக் குடி என்று பெயர் மாற்றி அதைத் தொடரச் செய்வது என்பது ஒரு சமூகக் குற்றம்.

இப்போதும் நாம் கூறுவது இதுதான்: சாதி என்பது ஒரு கட்டத்தில் கைவிடப்பட வேண்டும். சனநாயக நாட்டில் உயர்ந்த சாதி - தாழ்ந்த சாதி என்று இருக்க முடியாது; இருக்கக் கூடாது. சமத்துவம் பேணப்பட்டால் தான் அது ஒரு சனநாயக நாடு ஆகும். இந்நிலையில்தான் சுயசாதிப் பெருமை பேசுகிறவர்களைச் சாடுகிறோம். சாதிய அடையாளம் கோருகிறவர்களைச் சாடுகிறோம். இந்த நிலையிலாவது சாதியைக் கைவிடுங்கள் என்று வேண்டுகிறோம்.

இன்றைய சமூகம் கெட்டுப் போனதோடு போகட்டும். எதிர்காலச் சமூகத்தையும் பாழ்படுத்தி சீழ் பிடித்தச் சமூகமாக மாற்றி விடுவார்களோ என்ற அச்சம் நமக்கு இருக்கிறது. சாதிப் பெருமை பேசுகிறவர்கள், சாதி அடையாளம் தேடுகிறவர்கள் இவர்களை விட்டு விலகி ஓடிக்கொண்டே இருக்கிறோம்.

சாதிய அடையாளங்கள் இருக்கும்வரை அதன் ஒடுக்குமுறையும் வேறுபாடுகளும் தொடரும். அந்தச் சமூகம் ஒரு தேசிய இனமாக உருமாற முடியாது. ஒரு தேசிய இனம் என்பது சாதிகளின் தொகுப்பு அல்ல.

இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டுதான் கடந்த காலத்தில் கோட்பாடுகளை நன்கு கற்றிருந்த புலவர் கலியபெருமாள், தோழர் தமிழரசன் உள்ளிட்ட தமிழ்த்தேசியர்கள் சாதியை எதிர்த்தார்கள். பாவலரேறு பெருஞ்சித்திரனார், ஆனைமுத்து போன்றோர் எதிர்த்தார்கள். இப்போதும் நாம் எதிர்க்கிறோம். இக் கருத்தை ஏற்காதவர்கள், சாதிதான் எங்களுக்கு முக்கியம் என்று கருதுகிறவர்கள் இப்போதும் அப்படியே கருதிவிட்டுப் போகட்டும். இத்தகைய போக்கு நீண்ட நாள் நீடிக்காது. தமிழ்ச் சமூகம் ஓர்மையை நோக்கித்தான் நகர்ந்து கொண்டிருக்கிறது.

- (**பேராசிரியர் த. செயராமன்** அவர்களின் பதிவிலிருந்து...)

# தமிழ்நாடும் பயிற்று மொழியும்

● தஞ்சை மருத்துவர் சு. நரேந்திரன் ●

தமிழ்வழிக்கல்வி தமிழ்நாட்டில் விடுதலைக்கு முன்பே கட்டாயமாக்கப்பட்டிருந்தது. ஆங்கிலம் இரண்டாம் மொழியாக ஆறாம் வகுப்புக்கு மேல் ஒரு மொழிப்பாடமாக மட்டுமே கற்பிக்கப்பட்டு வந்தது.. 1941இல் மாணவர்கள் முதலாவதாகத் தமிழ்வழிக்கல்வி பெற்று பள்ளியிறுதித் தேர்வினை எழுதினார்கள்.

பொதுக் கல்வியில் தாய்மொழி வழிக்கல்வி கட்டாயம் என்று ஒரு நிலை இருந்தது. ஆறாம் வகுப்பு முதல் ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாக மட்டுமே கற்பிக்கப்பட்டது. விடுதலைக்கு முன்பே இங்கே நிலலிய .இந்த நிலை கைநழுவிப் போனது தமிழகத்துக்குப் பெருமையளிப்பதாக இல்லை. தமிழக வரலாற்றில் எந்தக் காலகட்டத்திலும் ஓர் அயல்மொழி ஒரு கட்டாயப்பாடமாக்கி இருபதாம் நூற்றாண்டுக்கு முன் எந்த ஆட்சியும் மக்கள் மீது திணித்ததில்லை. இருபதாம் நூற்றாண்டில் அதிலும் நாம் விடுதலை பெற்ற பின் தமிழ்நாட்டில் ஓர் அயல்மொழியை ஒரு கட்டாயப்பாடமாக்கிப் பொதுக் கல்வியிலேயே மக்கள் மீது திணித்திருக்கிறோம். அதே நேரத்தில் இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் சொந்தமான மொழியைப் புறக்கணித்துவிட்டுக்கூட ஒருவன் பட்டமும். பதவியும் பெற முடியும் என்னும் அவல நிலை உருவாகத் தமிழகம் எப்படியோ இடம் கொடுத்துவிட்டது.

வடமொழி ஆதிக்க எதிர்ப்புச் சூழலையும், இந்தி ஆதிக்க எதிர்ப்புச் சூழலையும் நன்கு பயன்படுத்திக் கொண்டு ஆங்கிலேயர்களே இந்நாட்டைவிட்டு வெளியேறிய நிலையில் ஆங்கிலப் பற்றாளர்கள் ஆங்கில ஆதிக்கத்திற்கு என்றுமில்லாத அளவுக்கு இங்கே வழிவகுத்து விட்டனர்.

பன்மொழிச் சூழலைக் கொண்ட இந்தியா போன்ற நாடுகளில் ஒரு மொழியை மட்டும் மேலே தூக்கி நிறுத்தி ஆதிக்க மொழியாக ஆக்குவது மக்களாட்சிப் பண்புக்குப் பொருந்தாது. ஒரு மொழி, ஆதிக்க மொழி ஆகிவிட்டால் அது மற்ற மொழிகளின் வளர்ச்சிக்கு ஊறு விளைவிப்பதாக ஆகிவிடும், தமிழ்வழிக் கலவிக்கும். ஒரு வகையில் தடையாகத்தான் இருக்கும்.

மக்களாட்சியில் மக்கள் மொழியின் வாயிலாக மக்களுக்குக் கல்வி வழங்கப்பட வேண்டும், இதுபற்றிய பொறுப்புணர்ச்சி தமிழகத்தில் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும், தமிழ்வழிக்கல்வி என்பது தமிழுக்குக் கிடைக்க வேண்டிய உரிமையில் ஓர் இன்றியமையாத பகுதி. இதை விடுத்து ஆங்கில வழியில் பயின்றால் உலகம் முழுவதும் வேலை கிடைக்கும் என்று கூறி கானல் நீர்களவுகளை வளர்க்கிறார்கள். இது உண்மையில்லை. ஆங்கில வழியில் படித்தவர்கள் 2 விழுக்காடே வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போகிறார்கள். அதிலும் வளர்ந்துள்ள நாடுகளில் அமெரிக்கா. இங்கிலாந்து போன்ற ஆங்கிலம் பேசும் நாடுகள் சிலவே. அரபு நாடுகளுக்கு வேலைக்குப் போக ஆங்கிலம் தேவையில்லை. போகிறவர்களும் அரபி மொழியைக் கற்றுக்கொள்ளப் போவதில்லை இதுவே உண்மை.

ஒரு நாடு வெளிநாடுகளில் வேலை தேடுவதை அடிப்படைத் திட்டமாக வைத்து தனது கல்விக் கொள்கையோ, பொருளாதாரக் கொள்கையோ வகுத்தால் அந்நாடு முன்னேற்றத்தின் முதல்படியில் கூட ஏற முடியாது. இது தவிர அறிவியலார் அனைவரும் ஆங்கிலேயர் என்பது போன்ற தவறான பார்வையும் உள்ளது. அறிவியலார் அவரவர் தாய் மொழியில் கண்டுபிடிப்புகளை எழுதுகிறார்கள். சில சமயங்களில் ஆங்கிலம் தவிர்த்து மற்ற மொழிகளில் வெளிவரும் ஆய்வுக் கட்டுரைகளில் கட்டுரைச் சுருக்கம் உள்ளது.

இது போலவே பல்கலைப்படிப்புகள் தொழிற்கல்வியில் நூற்கள் இல்லாது படிப்புகளைத் தொடங்க முடியாது என்று சொல்வதும் ஒரு முரட்டுவாதம். இலங்கையில், பள்ளியிலிருந்து பல்கலை வரையிலும் தமிழில் நடைபெற்றது. இது போலவே 100 மொழிகளுக்கு மேல் இருந்த இந்தோனேஷியாவில், இந்தோனேஷியாவின் மொழியான 'பாசா'வில் பாடங்கள் நடைபெறுகிறது, எழுத்து வடிவங்களே இல்லாத மலாய் மொழியில் கூட பாடங்கள் அனைத்தையும் கற்பித்து மலாயாவில் சாதனை புரிந்து வகுகிறது. இவை எல்லாம் விடுத்துத் தமிழ் நாட்டை நோக்கினால் கூட தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் வழியாகப் பொறியியல், மருத்துவம் தொடர்பான பல பாட நூல்கள் தமிழில் வெளிவந்துள்ளன மன மாற்றமும் உள்ள உறுதியும் தேவை

தமிழைப் பயிற்றுமொழியாக்க வேண்டும் எனக் கூறும்போது பாடநூற்கள் இல்லை. கலைச் சொற்கள் இல்லை, வேலை கிடைக்காது. வெளிநாடு செல்ல இயலாது.என்பன போன்ற தடைகள் எழுப்பப்படுகின்றன. வேலை வாய்ப்பு, வெளிநாட்டு வாய்ப்பு இரண்டும். அரசியல், பொருளாதாரச் சக்திகளோடு தொடர்புடையன திட்டமிட்ட பொருளாதாரமும் சமுதாய அமைப்பு குறித்த அரசியல் சித்தாந்தமும் நடைமுறைப்படுத்தப்பட்டால் வேலைவாய்ப்பை உருவாக்குதல் எளிது.

ஆங்கிலம் கற்றால் அயல்நாடு செல்லலாம் என்பதும் ஒருவகை மயக்கம் தான் ஆங்கிலம் முதன்மை மொழியாக உள்ள நாடுகளில் வேண்டுமானால் ஆங்கில வழிக் கல்வி உதவக்கூடும். சீனா, ஜெர்மன், சுவிட்சர்லாந்து, ஜப்பான், ஸ்பெயின், முதலிய நாடுகளில் ஆங்கிலம் உதவப் போவதில்லை. அந்தந்த நாட்டு மொழிகளைக் கற்றால்தான் நிலைத்து நிற்க முடியும் ஆங்கிலம் கல்வி மொழியாக இல்லாத நாடுகளுக்குப் பயிலச் செல்லும் நமது மாணவர்கள் அங்குள்ள பயிற்றுமொழியைக் கற்ற பின்னரே படிப்பைத் தொடர் முடிகிறது. ஒரு போலிஷ் மாணவன் 4 ஆண்டுகளில் முடிக்கும் படிப்பை ஆங்கிலம் வழிக சுற்ற இந்திய மாணவன் 5 ஆண்டுகளில் முடிக்கிறான். இவற்றில் ஓராண்டு போலில் மொழிக்கல்விக்கு ஒதுக்கப்படுகிறது. ஆங்கிலம் கோலோச்சாத சில நாடுகளில் இதுதான நிலை, நமது ஆங்கில வழிக் கல்வி சிலரது முன்னேற்றத்திற்குப் பயன்பட்டதே தவிர, ஒட்டு மொத்த சமுதாயத்துக்கும் பயன்படவில்லை என்பதே உண்மை. இந்த உண்மை புரியாததால், சமுதாயத்தின் அடிநிலையில் உள்ளவர்களும் அவதிப்படுகின்றனர். ஆங்கில மோகம் கொண்டு

தமிழ் மொழிகாக்க உறுதி ஏற்போம், ஒவ்வொரு மொழியும் பயிற்று மொழியாகும் போது புதிய துறை சார்ந்த கல்வியை அம்மொழிக்குப் புதிய அனுபவமாகவே அமையும். பல புதிய துறைகளைத் தமிழில்கொண்டு வரும்போது கலைச் சொற்கள் இன்மை, உலகஅளவில் வேலை வாய்ப்பு, உயர்கல்வி தமிழில் தொடர வாய்ப்பின்மை போன்ற பல சிந்தனைகள் மனதில் எழக்கூடும். ஆனால் அத்தனையும் சாத்தியமானதே.

பாடநூல்கள் இல்லை என்ற குறை தாய்மொழி வழிக்கல்விக்குத் தடையாக இருக்க முடியாது. ஏனெனில் அவசியம் இருந்தால் நூற்கள் தானே பெருகும். பாடநூல்கள் அனைத்தும் இருக்கிற மொழிதான் பயிற்று மொழியாக வேண்டுமெனில் உலகிலுள்ள எம்மொழியும் ஆக முடியாது.

அரசியல், அறிவியல் பொருளியல், தொழில் நுட்ப இயல், கணினி இயல் என்கிற எல்லாத் துறைக் கல்வியையும் அவரவர் தாய்மொழியில் கற்றதனால் தான் அவர்கள் அறிவாளிகளாகக் கண்டுபிடிப்பாளர்களாக உலகத்தை ஆட்டிப்படைப்பவர்களாக உருவாக முடிந்தது. இதுவே நடக்கக் கூடியது. இதுவே சரியானது.

மேலே சுண்ட நாடுகளில் தொழில் நுட்ப அறிவுக்கான மேற்படிப்புக்குப் போகிற மற்ற நாட்டினரும் எந்த எந்த நாட்டிற்குப் போகிறார்களோ அந்த அந்த நாட்டுத் தாய் மொழியை ஓராண்டுக் காலம் கற்றுக் கொண்டு அதன் வழியாகப் பெற்று செயலாற்றுகின்ற அறிவை (working knowledge) மட்டுமே வைத்துக் கொண்டு அந்தந்த மொழி மூலம் மட்டுமே மேல் படிப்பு, ஆய்வுப்படிப்பு என்பதை ஆங்காங்கே பெறுகிறார்கள்.ஐரோப்பாவிலுள்ள 20 தனித்தனி நாட்டினரும் அவரவர் தாய்மொழி வழியேதான் எல்லாத் துறைக் கல்வியையும் பெறுகின்றனர். ஆங்காங்கு உள்ள அரசும் மக்களும் கல்வியாளர்களும், ஏடுகளும் மாணவர்களும் இதை அப்படியே ஏற்கின்றனர். தமிழ்வழிக்கல்வி கேட்கிற யாரும் ஆங்கிலத்துக்கு எதிரானவர்கள் அல்ல. மொழிப் பயிற்சி வேறு, பயிற்று மொழி வேறு என்பதை நாம் சரியாக உணர்ந்தாக வேண்டும். தமிழ்வழிக்கல்வி எல்லா நிலைகளிலும் பயிற்று மொழியாக இருக்க ஆங்கிலம் 1950ஆம் ஆண்டு பயிற்று மொழி திட்டத்தைப் போல ஒரு மொழிப்பாடமாக இருக்கலாம்.

நம் நாட்டினருக்கு ஆங்கிலேயர் வருகைக்கு முன் அறிவியல் அறிவு கிடையாது என்றும் எல்லாமே மேலை நாட்டிலிருந்தே பெற்று வருகிறோம் என்ற கருத்து இன்று பாவலாகப் பேசப்படுகிறது. இது சரியானதல்ல. எனெனில் கல்லணை. தஞ்சை பெரியகோவில் கட்டுமானம் போன்ற அறிவியல் திறன் இன்று வரை போற்றப்படுகிறது. இது தவிர தொலகாப்பியா கூறும் உயிரியல் கோட்பாடுகளும் தமிழரின் அறிவியல் நிறத்தை வெளிக்காட்டும் கண்ணாடியாகும்.

தமிழ்ப் பயிற்று மொழியாக்க வேண்டுமெனில் தமிழர்களிடம் உள்ள தாழ்வுமனப்பான்மை, அரசின சரியான மொழிக்கொள்கை, நூற்றில் ஒருவர் வெளிநாடு செல்வதைப்பார்த்து அனைவருக்கும் ஆங்கிலமே பயிற்று மொழியாக இருப்பது நல்லது. என்ற தவறான எண்ணம் போன்றவைகள் கவளத்தில் கொள்ள வேண்டும்.

## ஆர்ப்பாட்டத்தில் பாஜக அரம்பர்களின் அரட்டல்... கண்டுகொள்ளாத காவல்துறை..

தமிழ்த் தேச மக்கள் முன்னணியின் சார்பாகக் கடந்த ஆகத்து 10 அன்று மாலை 5.00 மணியளவில் சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை இராம்நகர் பகுதியில் மணிப்பூர் இனப்படுகொலைக்குக் காரணமான பாஜக மாநில அரசே! இந்திய ஒன்றிய அரசே! பதவி விலகு! தமிழ்நாட்டின் மரபுக்கும், அரசுக்கும் எதிராகத் தமிழ்நாட்டு சட்டமன்ற அதிகாரத்தை அவமதித்து வரும் தமிழ்நாடு ஆளுநர் இரவியே தமிழ்நாட்டை விட்டு வெளியேறு! உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்துக் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. தேவகோட்டை நகர் காவல் துறையின் அனுமதியோடுதான் கூட்டம் நடத்தப்பட்டது. ஆனால் கூட்டம் தொடங்கும்போதே நகர் காவல் ஆய்வாளர் சரவணன், துணை காவல் கண்காணிப்பாளர் பார்த்திபன் உள்ளிட்டோர் அந்த இடத்தில் வந்து நின்று கொண்டு, "நீங்கள் முழக்கம் மட்டும் போட்டுவிட்டுக் கலைந்து சென்று விடுங்கள்; இருக்கைகள் போடக்கூடாது; நீண்ட நேரம் பேசக்கூடாது; ஒரு மணி நேரத்திற்குள் முடித்து விட வேண்டும்." என்று தொல்லைகள் கொடுத்த வண்ணமே இருந்தனர். காவல்துறையின் நெருக்கடிக்கு நடுவிலும் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் கண்டன உரையாற்றினார்கள். இறுதியாக தமிழ்தேச மக்கள் முன்னணியின் தலைவர் தோழர் மீ.த.பாண்டியன் அவர்கள் கண்டன உரையைத் தொடங்கும் போது பாஜகவினர் 10 பேர் வந்து கூட்டம் நடக்கும் இடத்தில் நின்று கொண்டு, "பாஜகவைப் பற்றி பேசாதே; மோடியைப் பற்றி பேசாதே; மீறிப் பேசினால் இந்த இடத்தை விட்டு நகர முடியாது." என்று மிரட்டினார்கள்.மோதலுக்குத் தயாரானார்கள். தேவகோட்டை நகர் காவல் துறையும், துணை கண்காணிப்பாளரும் வேடிக்கை மட்டுமே பார்த்தனர். பின்னர் கூட்டத்தில் பங்கெடுத்த தோழர்களும் மோதலை எதிர்கொள்ள தயாரான நிலையில் காவல்துறையினர் உடனே தலையிட்டுக் கூட்டம் நடத்திய தோழர்களிடம், "உடனே கூட்டத்தை முடியுங்கள். நீங்கள் பேசுவதால்தான் அவர்கள் பிரச்சனை செய்கிறார்கள்" என்று சொல்லி ஒலிபெருக்கியை நிறுத்தி விட்டு தோழர்களை அந்த இடத்தை விட்டு வெளியேற்றினர். பாஜகவின் இப்போக்கைக் கண்டித்து சிவகங்கை மாவட்ட அளவில் சனநாயக இயக்கங்கள் மற்றும் அனைத்து கட்சிகள் இணைந்து சனநாயக மக்கள் கூட்டமைப்பு ஒன்று உருவாக்கி வரும் 31/8/2023 அன்று தேவகோட்டை நகரில் மாபெரும் பொது கூட்டம் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. இக்கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளராக வழக்கறிஞர் தோழர் பாவெல் உள்ளார்.

# தமிழே கல்வி மொழி! தமிழ்நாட்டிற்கே கல்வி உரிமை!

# இரண்டுமே இன்றைய அளவில் அடிப்படைத் தேவைக்குரியவை..

மாணவன் செகதீசுவரனும் அவன் தந்தையும் தற்கொலை செய்து கொண்டதற்கு நீட் தேர்வே காரணம் என அனைவரும் அறிவோம்..

மாணவி அனிதா தொடங்கி 23 பேர் இதுவரை நீட் தேர்வால் பாதிக்கப்பட்டு வாழ்விழந்து இறந்திருக்கின்றனர்..

பெரும்பான்மை மக்கள் நீட் தேர்வே கூடாது என்கிறோம்.. நீட் தேர்வு ஒழிக்கப்பட வேண்டும் என்றால்கூடக் கல்வி உரிமையைப் பறித்து வைத்திருக்கிற இந்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்குக் கல்வி உரிமையை மீட்கப் போராடியாக வேண்டும் என அனைவரும் உணர்கிறோம்

வெறும் சட்டப் போராட்டங்களால் மட்டுமே நீட் டை நிறுத்திவிட முடியாது.. மக்கள் போராட்டங்களின் வழியாகவே நீட் டை மட்டுமின்றி இந்திய(தேசிய)க் கல்விக் கொள்கையையும் மறுத்திட முடியும்.. தமிழ்நாட்டிற்கெனத் தனித்த கல்வி கொள்கையை உருவாக்கிட முடியும்.. இந்நிலையில் தமிழே கல்வி மொழி, தமிழ்நாட்டிற்கே கல்வி உரிமை ஆகிய இரண்டுமே இன்றைய அளவில் அடிப்படைத் தேவைக்குரியவையாக உள்ளன..

தமிழ் வழிக் கல்வியே முதலில் அடிப்படைத் தேவையுடையது.. தமிழ்நாடு அரசு அதைச் செய்து விட்டால் அதன்பிறகு தமிழ்நாட்டுக் கல்வி உரிமைக்குப் போராடலாம் என்பதாகக் கருத்து கொண்டிருக்கின்றனர் சிலர்..

தமிழ் வழிக் கல்வியைத் தமிழ்நாட்டரசு முழுமையாக நடைமுறைப்படுத்திடவில்லை.. இந்த நிலையில், அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழி வகுப்புகளைத் தமிழ்நாட்டரசே தொடங்கியிருப்பது தமிழ் உணர்வாளர்களிடையே எதிர்ப்புணர்வாக உருவெடுத்திருக்கிறது..

புலி வாலைப் பிடித்த கதையாய் இந்திய அரசும், பன்னாட்டு நிறுவனங்களும் எங்கெங்கு இழுத்துச் செல்கின்றனவோ அந்தந்த இழுப்புகளுக்குத் தகுந்தவாறு தமிழ்நாட்டின் கல்வி நிலைகளும் மாறிக் கொண்டிருக்கின்றன..

தமிழ்நாட்டிற்குள் சிபிஎஸ்இ கல்விக்கூடங்கள், கேந்திரிய வித்யாலயா, பன்னாட்டுக் கல்வி நிறுவனங்கள் என இந்திய அரசின் பன்னாட்டு நிறுவனங்களின் அரசுகளின் தொடர்புடைய கல்விக்கூடங்கள் புற்றீசல்களாய்ப் பெருகிக் கொண்டுள்ளன..

இந்திய அரசுத்துறை வேலைகளில் மட்டுமன்றி, தரவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட தனியார் நிறுவனத் தொழிலகங்கள், அலுவலகங்கள் அனைத்திலும் ஆங்கிலமே அலுவல் மொழியாக அமைக்கப்பட்டிருக்கிறது..

மருத்துவம் தொழில்நுட்பம் உள்ளிட்ட உயர் கல்வி முழுக்க ஆங்கில மொழி வழியிலேயேதான் நடத்தப்படுகின்றன..

நுழைவுத் தேர்வுகளும் போட்டித் தேர்வுகளும் குடிமைப்பணி தேர்வுகளும் (தாய் மொழியில் எழுதுகிற வாய்ப்பு அண்மைக்காலங்களில் அமைக்கப்பட்டு இருப்பினும்) ஆங்கில வழி எழுதுவதிலேயே பெருமளவு வாய்ப்புகள் கிடைக்கப்பெறுகின்றன..

இந்நிலையில் சிபிஎஸ்இ யில், கேந்திரிய வித்யாலயாவில், பன்னாட்டு நிறுவனங்களில் கல்வி பெறுகிற மாணவர்களுக்கு இணையாகத் தங்களை வளர்த்துக் கொள்ளுகிற நோக்கத்தில் ஆங்கில வழிக் கல்வியும் பயில வேண்டும் என்கிற ஆர்வம் எளிய மக்களுக்கும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிறது..

இந்தச் சூழலில், சிபிஎஸ்சி உள்ளிட்ட பிற அரசுகளின் கல்வி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இயங்குகிற பொழுது அவை தமிழ் வழியில் மட்டுமே நடத்தப் பெற வேண்டும் என்றும், தமிழ்நாட்டுப் பாட நிறுவனங்கள் அமைக்கிற கல்வித் திட்டங்களோடு தொடர்புடைய நிலையிலேயே அவை இயங்குதல் வேண்டும் என்றும் வலுவாகவும் ஆணித்தரமாகவும் வரையறுத்துச் சொல்லுகிற அதிகாரப் போக்கைத் தமிழ்நாட்டு அரசில் ஆட்சியர்களாகப் பொறுப்பேற்று இருக்கிறவர்கள் கொண்டிருக்கவில்லை..

அதற்குக் காரணம் (1) தமிழ்நாட்டுக் கல்வி உரிமை முழுக்க முழுக்கத் தமிழ்நாட்டு அரசுக்குரியதாக இல்லை என்பதும், (2) தமிழ்நாட்டு ஆட்சி அதிகாரத்தில் பொறுப்பேற்கிறவர்கள் கல்வி உள்ளிட்ட தமிழ்நாட்டு அரசியல் அதிகார உரிமைகளுக்காக, வலுவாக முன்னின்று போராடக் கூடியவர்களாக இல்லை என்பதும் ஆகும்..

இந்நிலையில், கல்வித்துறையும்கூடப் பெரும்பான்மை அளவில் இந்திய அரசின் கட்டுக்குள் சென்றுகொண்டிருப்பதும், உயர்கல்வித்துறைகள் பெருமளவில் அதன் அதிகாரத்திற்கு உள்ளடங்கிப் போயிருப்பதும், பல்கலைக்கழக நல்கை(மானிய)க் குழு என்கிற அளவில் பல்கலைக்கழகங்களின் முழு அதிகாரங்களையும் தங்கள் கட்டுக்குள் இந்திய அரசு பறித்துக் கொண்டிருப்பதையும், நூலகத்துறை உள்ளிட்டுக் கல்வித் தொடர்புடைய அனைத்து துறைகளையும் இந்திய அரசு படிப்படியாகப் பறித்துக் கொண்டு வருவதையும் எளிய செய்திகளாக விட்டுவிட முடியாது..

கல்வி நிலையிலும் தமிழ்நாடு அரசு தன் அதிகாரத்தைப் படிப்படியாக இந்திய அரசிடம் இழந்து வரும் நிலையில் இந்திய அரசு அதிகாரமே மேலோங்கி வருகிறது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்..

இந்திய அரசின் ஆட்சி அதிகாரத்திற்குட்பட்டுப் பண்பாட்டு நிலையில் சமசுக்கிருதம் உயர் மொழியாக, இன்னும் சொன்னால் கடவுளின் மொழியாகப் பரப்பப்பட்டு அதற்கென்று இந்திய அரசு, பல ஆயிரம் கோடி உருபாக்களைச் செலவு செய்து வருவதை அறிவோம் . அதுபோல் கல்வித்துறையில் இந்தி மொழியையே அனைத்து நிலைகளிலும் கொண்டு வருவதற்கான வேலைகளை இந்திய அரசு தொடர்ந்து செய்து வருகிறது. மொழி மட்டுமன்றிப் பாடத்திட்டங்கள் அனைத்தும் இந்திய அதிகார வகுப்பிற்குட்பட்ட குமுக அரசியல் பொருளியல் தன்மையிலேயே அமைக்கப்பட்டு வருகின்றன..

ஒரே நாடு, ஒரே அரசு என்கிற வகையில் ஒரே மொழி, ஒரே பாடத்திட்டம் என இந்தியா முழுவதும் ஒரே அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வருகிற வகையிலேயே தேசியக் கல்விக் கொள்கை என இந்திய அதிகார வகுப்பிற்குச் சார்பான கல்விக் கொள்கையையே இந்திய அரசு திணிக்கிறது..

ஒவ்வொரு மாநிலமும் தனித்தனி வரலாற்றை மொழியை பண்பாட்டை அரசியலை பொருளியலைக் கொண்டிருக்கும்போது அதற்குத் தகவான வாழ்வியல் அமைப்புகளுக்குரிய கல்வியையே அவரவர்கள் தாய் மொழியிலேயே ஏற்க முடியுமே அல்லாமல் இந்திய அளவில் பொதுவான ஒரு கல்வித் திட்டத்தை உருவாக்கி அதை அனைத்து மாநிலங்களுக்கும் கொண்டு வந்து விட இயலாது.. அப்படிச் செய்வது ஆதிக்க வகுப்பான பார்ப்பனிய அதிகார வகுப்பின் தேவைக்குரிய மொழி அரசியல் பண்பாட்டு பொருளியல் நலனுக்கானதாகவே அமையும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்..

அதுவும் இப்போது திடுமென பாசிச பாஜக அரசு தாய் மொழிக் கல்வி குறித்துப் பேசுகிறது.. தாய்மொழியிலேயே கல்வியைக் கொண்டு வருவதாகச் சொல்லுகிறது.

அப்படிச் சொல்லுகிற பாஜக தமிழ்நாட்டில் உள்ள சிபிஎஸ்சி, கேந்திரிய வித்யாலயா, பன்னாட்டுக் கல்வி நிலையங்கள், ஐஐடி உள்ளிட்ட இந்திய அரசின் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் தமிழ் வழிக் கல்வி மட்டுமே தரப்படும் என்பதை அறிவிக்கிறதா? அறிவிக்க முடியுமா?

ஆக, தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றுவதற்காக அனைத்து மொழிகளும் ஆட்சி மொழி என்று கடந்த காலங்களில் காங்கிரஸ் கட்சி உள்ளிட்ட சில கட்சிகள் பேசி ஏமாற்றியதைப் போல், இன்றைக்கு பாஜக அரசு அனைவரும் அவரவர் தாய்மொழி வழியாகவே கல்வி பயிலலாம் என்று சொல்லி ஏமாற்றுகிறது..

தொடக்கக்கல்வியை, பள்ளிக் கல்வியைத், தாய்மொழி வழியாக சிபிஎஸ்இ, கேந்திரிய வித்யாலயா, பன்னாட்டுக் கல்விக்கூடங்களில் நடைமுறைக்குக் கொண்டு வருவதை ஏற்காத பாஜக அரசு மருத்துவம் தொழில்நுட்பம் உள்ளிட்ட உயர் கல்வியைத் தாய் மொழியில் தர இருப்பதாகக் கூறுவது பச்சையான ஏமாற்று ..

தாய் மொழியில் கல்வி தந்து கொண்டிருக்கிற அந்தந்த மாநில அரசுகளின் கல்வி உரிமைகளைப் பறித்துக் கொண்டு இந்திய அளவில் அனைவருக்கும் பொதுவான ஒரே கல்வியைத் தரப்போவதாகச் சொல்வதும் முழுமையான ஏமாற்றே..

ஆக, ஒவ்வொரு மாநிலத்திற்கும் கல்வி நிலையில் இரண்டு முதன்மை கடமைகள் இருக்கின்றன..

ஒன்று அந்தந்த மாநில மொழிகளிலேயே கல்வியைத் தருவது.. மற்றது அந்தந்த மாநில அதிகாரத்திற்குட்பட்ட கல்வி உரிமையை அமைத்துக் கொள்வது..

இந்த வகையிலேயே தமிழ் வழிக் கல்வி எந்த அளவு முதன்மையானதோ அந்த அளவு தமிழ்நாட்டிற்கே கல்வி அதிகார உரிமை என்பதும் தமிழ்நாட்டிற்கு முதன்மையானது..

தமிழ்நாட்டிற்கே கல்வி அதிகார உரிமை என்பதை முன்னெடுக்காமல் தமிழ் மொழி வழிக் கல்வியை மட்டுமே நிலைநாட்டி விட முடியாது..

அதேபோல் தமிழ் வழிக் கல்வியை நடைமுறைப்படுத்த முனையாமல், தமிழ்நாட்டிற்கே கல்வி அதிகார உரிமை எனப் போராடியும் பயனில்லை..

எனவே இந்த இரண்டு நிலைகளையும் கல்வி அளவில் கவனம் செலுத்துகிற அனைவரும் வலிமையாக முன்னெடுத்தாக வேண்டும் என்பதே நாம் முன் வைக்கிற செய்தி.

● **பொழிலன்**

வெளியீட்டுக் குழு : **பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல்**

**தமிழ்நாடு** (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874

(கீற்று இணையதளத்திலும் பார்க்கலாம்) மின்னஞ்சல் : thamizhnadu2051@gmail.com

அச்சிட்டோர் : மூகாம்பிகை அச்சகம், 24, வாணிபர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005